டாக்டர்

B. R. அம்பேத்கர்



# காந்தியம்

# காந்தியம்

டாக்டர் B.R. அம்பேத்கர்



**கார்முகில் பதிப்பகம்**
129-A, பாலம் ஸ்டேஷன் ரோடு
கோரிப்பாளையம், மதுரை-2

# காந்தியம்

(சமூக ஆய்வு)


| | | |
|---|---|---|
| முதல் பதிப்பு | : | மே-' 88 |
| ஆசிரியர் | : | டாக்டர் B. R. அம்பேத்கர் |
| எழுத்து வடிவம் | : | 10 புள்ளி |
| தாள் எடை | : | 10.9 கிலோ டபுள் கிரவுன் வெள்ளைத்தாள் |
| வெளியீடு | : | கார்முகில், மதுரை |
| அச்சகத்தார் | : | அருணாசலம் மின் அச்சகம், 38/1, மலையாண்டித் தெரு மணப்பாறை |
| பக்கங்கள் | : | 64 |
| விலை | : | ரூ **4** |

| | | |
|---|---|---|
| மொழிபெயர்ப்பு | : | திரு **வளவன்** |

# காந்தியம்

இதுவரையில் இந்திய தேசத்தின் சமூக-பொருளாதார வாழ்வை புனரமைக்க விழைந்த எல்லா இந்தியர்களும், தனிமனித வாதத்திற்கும், கூட்டுவாதத்திற்கும் இடையிலானதாக (collectivism), முதலாளித்துவத்திற்கும், பொதுவுடைமைக்கும் இடையிலானதாக, மிதவாதத்திற்கும், தீவிரவாதத்திற்குமிடையிலானதாக (conservatism versus radicalism) மற்றும் இது போன்ற வடிவில்தான் அதைப் பேசிவந்திருக்கிறார்கள். சமீப காலமாக, இந்தியச் சூழலில் புதிய 'இஸம்' ஒன்று பேசப்படுகிறது. அது 'காந்தியம்'-தான். 'காந்தியம்' என்றெல்லாம் எதுவும் கிடையாது' என்று திரு. காந்தி சமீபத்தில் மறுத்திருக்கிறார் என்பது உண்மைதான். இந்த மறுப்பு காந்தி அடிக்கடி அணிந்துகொள்கிற 'அடக்கம்' என்ற போர்வையே தவிர வேறொன்றுமில்லை. இப்படிச்சொல்வதால் 'காந்தியம்' இருப்பது உண்மையில்லாமல் போகாது. ஏற்கனவே திரு. காந்தியிடமிருந்து எந்தவித மறுப்பும் வராமலே, காந்தியத்தின் பெயரில் ஏராளமான புத்தகங்கள் வெளி

வந்திருக்கின்றன. இந்தியாவிலுள்ளும், வேறு நாடு களிலும் உள்ள பலரின் கற்பனைகளை இது ஆக்ர மித்துக் கொண்டிருக்கிறது. மார்க்ஸியத்திற்கே இதை ஒரு மாற்றாக முன் வைக்கத் தயங்காத அளவிற்கு சிலரிடம் இது அசாத்திய நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது.

முந்தைய பக்கங்களில் கூறப்பட்டவற்றைப் படித்து விட்டு, ''காந்தி தங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று தீண்டத்தகாதவர்கள் எதிர்பார்த்தார் களோ, அதை வேண்டுமானால் அவர் செய்யாமல் விட்டிருக்கலாம். ஆனால் காந்தியம் கூடவா அவர் களுக்கு எவ்வித நம்பிக்கையும் அளிக்கவில்லை?'' என்று காந்தியவாதிகள் கேட்கலாம். காந்தி தீண்டத்தகாதவர் களுக்காக அவ்வப்போது எடுத்த சிறுசிறு நடவடிக்கை களை மட்டுமே நான் நினைவுறுத்துவதாகவும், அவரது கொள்கையின் முழுவீச்சை நான் மறந்து விட்டேனென் றும் அவர்கள் என்னை குறை கூறலாம். ஒரு மாபெரும் கொள்கையை படைக்கவிருக்கும் ஒரு மனிதன் சிறுசிறு நடவடிக்கைகளில் மட்டுமேஈடுபட நேரிடலாம் என்றும், எனினும் அத்தத்துவம் அதன் இயல்பான வலிமை யினால், இதுவரை கூறப்படாத அனைத்தையும் எடுத் துக்கொண்டு வலிமை மிக்கதாக மாறலாம் என்பதால், அவரது சிறு நடவடிக்கைகளை மறந்து விடலாம் என்பதையும் நான் ஒத்துக்கொள்ளதயாராயிருக்கிறேன். காந்தியம் என்பது அதனவில் படிப்பதற்கு சுவையான ஒன்றுதான். ஆனால் திரு. காந்தியுடன் பரிச்சயம் ஏற் பட்ட பின்பு காந்தியத்தைப் படிப்பதென்பது சலிப் பூட்டும் ஒன்று. எனவேதான் முதலில் காந்தியத்தையும், தீண்டத்தகாதவர் பற்றிய காந்தியக் கருத்துக்களையும் பற்றி கண்டு கொள்ளாமலிருக்க நான் முனைந்தேன். அதே சமயம், காந்தியத்தைப் பற்றி நான் அசட்டை

யாக இருந்தது துரதிருஷ்டவசமானது என்பதை என்னால் மறக்க முடியவில்லை. காந்தியை நான் அம்பலப்படுத்தியதைப் பொறுக்க முடியாத காந்திய வாதிகள், இதைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண் டார்கள்; தீண்டத்தகாதவர்களது பிரச்னைகளை காந்தி தீர்க்க முடியாவிட்டாலும், தீண்டத்தகாதவர்கள் காந்தி யத்தில் தங்கள் தீர்வைக் காண்பார்கள் என்று அவர் கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்தார்கள். இத்தகைய பிரச்சாரத்திற்கு இனியும் இடம் கொடுக்கக் கூடாது என்ற நோக்கமுடன்தான், எனது முந்திய விருப்ப மின்மையை கைவிட்டு, காந்தியத்தைப் பற்றி விவாதிக்க முனைகிறேன்.

காந்தியம் என்பது என்ன? அது எதை முன்நிறுத்துகிறது? பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து அதன்போதனைகள் என்ன? சமூகப் பிரச்சினை கள்குறித்து அதன் போதனைகள் என்ன?

முதற்கண், காந்தியவாதிகள் சிலர் செப்பிடு வித்தையான ஒரு காந்தியக் கருத்தோட்டத்தை உருவாக்கியுள்ளனர்; இத்தகைய கருத்தோட்டம் கலப் படமற்ற கற்பனைத்தன்மை உடையது. இக்கருத் தோட்டத்தின்படி காந்தியம் என்பது பழைய கிராமிய நிலையைக் கொண்டுவருவதும் கிராமத்தை தன்னிறைவு கொண்டதாக்குவதும்தான். அது காந்தியத்தை வட்டார வியல் (Regionalism) குறித்தான செய்தி மட்டுமே எனஆக்கிவிடுகிறது. வட்டாரவியலைப்போல காந்தியம் எளிமையானதுமல்ல; களங்கமற்றதுமல்ல. வட்டார வியலைக் காட்டிலும் மிகப்பெரிய உள்ளீட்டைக் கொண்டது காந்தியம். காந்தியத்தின் ஒரு சிறிய, அற்பமான பகுதியே வட்டாரவியலாகும். காந்தியத்திற் கென ஒரு சமூகத் தத்துவம் இருக்கிறது; காந்தியத்திற்

கொள ஒரு பொருளாதாரத் தத்துவம் இருக்கிறது. காந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக தத்துவங்களைக் கணக்கில் கொள்ளாமல் ஒதுக்குவது காந்தியத்தை வேண்டுமென்றே தவறாகப் படம்பிடித்துக் காட்டுவதாகும். எனவே, முதலாவதும் மிக முக்கியமானதுமான தேவை காந்தியத்தின் உண்மையான சொரூபத்தைக் காட்டுவது ஆகும்.

சமுதாயப் பிரச்சினைகள் குறித்து காந்தியாரின் போதனைகளில் இருந்து தொடங்குவோம். இந்தியாவில் மிக முக்கியமான சமுதாயப் பிரச்சினையாக அமைந்திருப்பது சாதியமைப்பே. இந்தச் சாதியமைப்பு குறித்த காந்தியாரின் நோக்குகள் '' நவஜீவன் '' என்கிற குஜராத் இதழில், 1921-22ல் மிகத்தெளிவாக அவரால் விரித்துரைக்கப்படுகின்றன. அக்கட்டுரை குஜராத்தியில் எழுதப்பட்டுள்ளது. என்னால் இயன்ற வரை அவரையொட்டியே அவருடைய சொந்தச் சொற்களிலேயே, அவருடைய நோக்குகள் பற்றிய ஆங்கில மொழியாக்கத்தைக் கீழே தருகிறேன்.

'' 1. இந்துச் சமுதாயம் சாதியமைப்பை அடிக்களனாகக் கொண்டு கட்டப்பட்டிருப்பதால் தான், நிலைகொண்டு இருந்து வருகிறது என நான் நம்புகிறேன்.

2. சுயராஜ்யத்திற்கான வித்துக்களை சாதியமைப்பிலே காணமுடியும். வெவ்வெறு சாதிகளும் இராணுவப்படையின் வெவ்வேறு பிரிவுகளைப் போன்றவை. ஒவ்வொரு படைப்பிரிவும் முழுப்படையின் நலனுக்காகப் பணியாற்றுகிறது.. ...............

---

• காந்தி சிக்சன் என்கிற தொகுப்பு வெளியீட்டில் 2ம் தொகுப்பில் 18ம் அத்தியாயம்.

3. சாதியமைப்பை உருவாக்க முடிந்திருக்கிற ஒரு சமுதாயம் தன்னை அமைப்பாக்கிக்கொள்ளும் இணையற்ற ஆற்றலைப் பெற்றிருக்கிறது என்றே கூறியாக வேண்டும்.

4. தொடக்கக் கல்வியைப் பரப்புவதற்கான ஆயத்தமானதொரு வழிவகையை சாதிபெற்றிருக்கிறது. ஒவ்வொரு சாதியும் அந்தச் சாதியிலுள்ள குழந்தைகளின் கல்விக்கானபொறுப்பை ஏற்றுக்கொள்ளமுடியும். சாதி ஒரு அரசியல் அடிப்படையைக் கொண்டது. சாதி ஒரு தேர்தல் தொகுதியாகச் செயல்பட்டு பிரதிநிதித்துவ அமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ளமுடியும். ஒரே சாதியின்உறுப்பினர்களுக்கு இடையேயானபூசல்களைத் தீர்ப்பதற்குச் சிலரை நீதிபதிகளாகத் தேர்ந்தெடுப்பதன்வாயிலாக நீதிமன்றச் செயல்பாடுகளை மேற்கொள்ள சாதியால் முடியும். சாதிகள் இருப்பதைக் கொண்டு, ஒவ்வொரு சாதியும் ஒவ்வொரு பணியையாற்றச் செய்வதன் மூலம் ஒரு பாதுகாப்பு அரணை ஏற்படுத்திக் கொள்வது எளிதாகிறது.

5. தேச ஒற்றுமையை வளர்ப்பதற்கு கலப்பு மணம், கலந்துண்ணல் ஆகியவை தேவையற்றவை என்றே நான் நம்புகிறேன். கலந்துண்ணல் நட்பை உருவாக்குகிறது எனக்கருதுவது, அனுபவத்திற்கு மாறாக உள்ளது. கலந்துண்ணல் நட்பை வளர்க்கும் என்பது உண்மையென்றால் ஐரோப்பாவில் யுத்தமே இருந்திருக்காது. இயற்கையின் அழைப்புக்குப் பதிலளிப்பது (மலஜலம் கழிப்பது) எவ்வளவு அருவெறுப்பான செயலோ அவ்வளவு அருவெறுப்பானதே உணவருந்துதலும். இரண்டிற்கும் உள்ள வேற்றுமை என்னவென்றால் இயற்கையின் அழைப்புக்குப் பதிலளித்தபின் நமக்குச் சாந்தி கிட்டுகிறது. உண

வருந்திய பின்னரோ நமக்கு சங்கடமே உண்டாகிறது. இயற்கையின் அழைப்புக்குத் தனிமையில் விடையளிப்பது போலவே உணவையும் தனித்தேதான் உட்கொள்ள வேண்டும்.

6. இந்தியாவில் அண்ணன் தம்பிகளின் குழந்தைகளுக்கு இடையே திருமணம் செய்வதில்லை. அக்குழந்தைகளுக்கு இடையிலே திருமணம் இல்லையென்பதால் அவர்கள் தங்களுக்குள் நேசம் பாராட்டுவதை நிறுத்திக்கொண்டு விட்டனரா? வைணவர்களில் பலபெண்கள் மிக வைதிகமாயிருக்கிறார்கள் (orthodox). அவர்கள் குடும்பத்தாருடன் ஒன்றாக உணவருந்துவதில்லை; பொதுவான தண்ணீர்க் குடத்திலிருந்து நீர் அருந்துவதும் இல்லை. அவர்களுக்குள் நேசம் இல்லையா? பல்வேறு சாதிகளிடையே கலப்புமணம், கலந்துண்ணல் ஆகியவற்றை சாதியமைப்பு அனுமதிப்பதில்லை என்பதற்காக அவ்வமைப்பு கெடுதலான ஒன்று எனக் கூறமுடியாது.

7. கட்டுப்பாட்டின் மறு பெயரே சாதி. சாதி அனுபவித்தலுக்கு (enjoyment) ஒருவரம்பு கட்டுகிறது. அனுபவித்தலுக்காக ஒரு மனிதன் சாதி எல்லைகளைத் தாண்டுவதைசாதி அனுமதிப்பதில்லை. கலந்துண்ணல், கலப்புமணம் போன்றவற்றின மீதான சாதீயக் கட்டுப்பாடுகளின்பொருள் இதுவே.

8. சாதியமைப்பை அழித்துவிட்டு மேற்கத்திய ஐரோப்பிய சமூக அமைப்பை மேற்கொள்வதன் பொருள் என்ன? சாதியமைப்பின் ஆத்மாவான குலத்தொழில் கொள்கையைக் கைவிட்டுவிட வேண்டுமென்பதே. குலவழிக் கொள்கை என்பது ஒரு உள்ளமைப்புக் கொள்கை. அதை மாற்றுவது ஒழுங்கின்

மையை உருவாக்குவதே ஆகும். ஒரு பிராமணனை, பிராமணன் என்று நான் கூப்பிட முடியாதென்றால், பிராமணனால் என் வாழ்க்கைக்கு ஒரு பயனுமில்லை. ஒவ்வொரு நாளும் ஒரு பிராமணன் சூத்திரனாகவும், ஒரு சூத்திரன் பிராமணனாகவும் மாற்றப்பட வேண்டும் என்றால் அது ஒரு பெரும் குழப்பமாகும்.

9. சாதி அமைப்பு என்பது சமூகத்தின் இயற்கையான ஒரு ஒழுங்குமுறை. இந்தியாவில் சாதி அமைப்புக்கு ஒரு மதப்பூச்சு தரப்பட்டிருக்கிறது. மற்ற நாடுகள் சாதி அமைப்பின் பயனளிக்கும் தன்மையைப் புரிந்துகொள்ளாததால், அங்கெல்லாம் சாதிஅமைப்பு ஒரு தளர்ந்த நிலையிலேயே நின்று நிலவியது; எனவே தான் சாதியமைப்பால் இந்தியா நன்மை அடைந்த அளவுக்கு மற்ற நாடுகளால் நன்மையடைய முடியவில்லை.

என்னுடைய நோக்குகள் இவையே; எனவே, சாதியமைப்பை அழிக்கப் புறப்பட்டிருக்கிற அனைவருக்குமே நான் எதிராளியாகவே இருக்கிறேன்.''

1922-ல் காந்தியார் சாதியமைப்பின் பாதுகாவலராக இருக்கிறார். இதுபற்றி மேலும் என்னவெல்லாம் கூறுகிறார் எனக் கண்டறிய முற்படுவோர் கண்ணுக்கு, 1925-ல் காந்தியார் சாதியமைப்பை விமர்சனக் கண்கொண்டு நோக்குவது தென்படுகிறது. 1925-ல் பிப்ரவரி 3-ல் காந்தியார் கூறுவதாவது:

''நான் சாதிக்கு ஆதரவு தந்ததற்கான காரணம், சாதி கட்டுப்பாட்டை வலியுறுத்துகிறது என்பதாலேயே. ஆனால் இப்போது சாதி என்பதன் பொருள் கட்டுப்பாடு என்பது அல்ல. அதன் பொருள்

வரம்புகள் என்பதே. கட்டுப்பாடு என்பது உன்னத மானது; சுதந்திரத்தை வென்றடையத் துணை நிற்பது. ஆனால் வரம்பு என்பதோ சங்கிலி போன்றது; சங்கிலி நம்மைக் கட்டி வைக்கிறது. சாதிகள் இன்று நின்று நிலவுகிற முறையில் மெச்சும்படியானது எதுவுமே இல்லை. சாதிகள் சாத்திரங்களின் கொள்கைகளுக்கு நேர்மாறாய் இருக்கின்றன. சாதிகளின் எண்ணிக்கையோ அளவிட முடியாதது. மேலும் கலப்பு மணத்திற்கு எதிரான தடையும் இருக்கிறது. இது முன்னேற்றத்திற்கான சூழ்நிலையே அல்ல. வீழ்ச்சிக்கான நிலையே ஆகும்!

இந்நிலையிலிருந்து மீளுவதற்கான வழிதான் என்ன?

இக்கேள்விக்குப் பதிலாகக் காந்தியார் கூறுகிறார் :

''மிகச்சிறந்த நிவாரணம் சிறு சாதிகள் தம்முள் ஒன்றாய் கலந்து ஒரு பெருஞ்சாதியாகிவிட வேண்டும். நான்கு வர்ணங்களால் ஆன பழைய அமைப்பை நாம் மீண்டும் தோற்றுவிக்கும் வண்ணம் மேற்கூறியது போன்ற நான்கு பெருஞ்சாதிகள் இருக்கவேண்டும்''

சுருங்கச் சொன்னால், 1925-லே காந்தியார் வர்ணாசிரமத்தை உயர்த்திப் பிடிப்பவராகி விடுகிறார்.

புராதன இந்தியாவிலே நிலவிவந்த பழையவர்ண அமைப்பு முறை, சமூகத்தை நான்கு ஒழுங்கு முறைகளாகப் (order) பிரித்து வைத்திருந்தது.

1. கற்பனை தத் தொழிலாகக் கொண்ட பிராமணர்கள்

2. போரிடுதலைத் தொழிலாகக் கொண்ட சத்திரியர்கள்.

3. வாணிபத்தைத் தொழிலாகக்கொண்டவைசியர்கள்

4. மற்ற வகுப்புகளுக்குத் (classes) தொண்டூழியம் செய்வதைத் தொழிலாகக் கொண்ட சூத்திரர்கள்.

காந்தியாரின் வர்ண அமைப்புமுறை பழைய வைதிக இந்துக்களின் (orthodox Hindus) வர்ண அமைப்பு முறையை ஒத்ததேதானா? காந்தியார் தன்னுடைய வர்ண அமைப்பு முறையைப் பின்வருமாறு விளக்குகிறார் :●

"1. வர்ணப் பாகுபாடு பிறப்பை அடிப்படையாகக் கொண்டது என நான் நம்புகிறேன்.

2. சூத்திரன் கல்வியறிவு பெறுதலுக்கோ, தாக்குதல் அல்லது தற்காத்துக் கொள்ளுவதற்கான இராணுவக் கலையைப் பயிலுவதற்கோ ஆனவழியில் குறுக்கிடுகிற எதுவும் வர்ண அமைப்பு முறையில் இல்லை. அதேபோல், சத்திரியன் தொண்டூழியம் செய்வது அவனுடைய முடிவுக்கே உட்பட்ட ஒன்று. வர்ண அமைப்பு முறை அவனுக்கு ஒரு தடையல்ல. வர்ண அமைப்பு முறை பிறப்பிக்கும் ஆணை என்னவென்றால் சூத்திரன் ஒருவன் வாழ்க்கைக்குப் பொரு

---

● குஜராத்தி மூலத்தில் காந்தியார் எழுதி, வர்ண வயவஸ்தா புத்தகமாக மறுபதிப்பு செய்ததில் சாதி பற்றி காந்தியார் எழுதிய கட்டுரையிலிருந்து வடித்தெடுக்கப்பட்டது.

ளீட்டும் ஒரு வழியாகக் கற்பதை ஆக்கிவிடக்கூடாது என்பதும், சத்திரியன் ஒருவன் தொண்டூழியம் செய்து வாழ்க்கைக்குப் பொருளீட்டும் வழியாகக்கொள்ளுதல் கூடாது என்பதுமாகும். அதைப்போலத்தே பிராமணனும் போர்க்கலையையோ வணிகத்தையோ பயிலலாம். ஆனால், அவன் அவற்றை வாழ்க்கைக்குப் பொருளீட்டும் ஒரு வழியாக ஆக்கக்கூடாது. அதேபோல் வைசியன் கற்கலாம் அல்லது போர்க்கலையைப் பயிலலாம். ஆனால் அவன் வாழ்க்கைக்குப் பொருளீட்டும் வழியாக அதை ஆக்கக்கூடாது.

3. வர்ண அமைப்பு முறை என்பது வாழ்க்கைக்குப் பொருளீட்டும் வழியோடு தொடர்புடையது. ஒரு வர்ணத்துக்குரிய ஒருமனிதன் மற்ற வர்ணத்தாரால் சிறப்பாகப் பயிலப்படுகிற எந்தக் கலையையோ, விஞ்ஞானத்தையோ, அறிவையோ பெறுவதால் இடையூறு எதுவும் இல்லை. ஆனால் வாழ்க்கைக்குப் பொருளீட்டும்வழியைப் பொறுத்தமட்டிலோ அவன், தான் எந்த வர்ணத்துக்குரியவனோ, அந்த வர்ணத்துக்குரிய வாழ்க்கைத் தொழிலையே செய்தாக வேண்டும். அதாவது அவன தன் மூதாதையர்களின் குலத் தொழிலையே செய்தாக வேண்டும்.

4. வர்ண அமைப்பு முறையின் நோக்கம் போட்டியையும், வர்க்கப் போராட்டத்தையும், வர்க்க யுத்தத்தையும் தடுப்பதே. யார் யாருக்கு என்னென்ன வாழ்க்கைத் தொழில்கள், என்னென்ன கடமைகள் என வர்ண அமைப்பு முறை நிர்ணயித்து விடுவதாலேயே வர்ண அமைப்பு முறையில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

5. வர்ணம் என்பதன் பொருள் ஒரு மனிதன் பிறப்

பதற்கு முன்னரே அவனுடைய தொழில் என்னவென்த் தீர்மானிப்பதே.

"வர்ண அமைப்பு முறையில் எந்த மனிதனுக்கும் தான் மேற்கொள்ள நினைக்கும் தொழிலைத் தேர்ந்தெடுக்கும் உரிமையில்லை. அவன் மேற்கொள்ள வேண்டிய தொழில் குலமுறையில் தீர்மானிக்கப்படுகிறது."

பொருளாதார வாழ்வு பற்றிய துறையை நோக்கினால் காந்தியார் இரண்டு குறிக்கோள்களை ஆதரித்து நிற்கிறார்.

இயந்திர சாதனங்களை எதிர்ப்பது என்பது இக்குறிக்கோள்களுள் ஒன்று. 1921-லேயே காந்தியார் இயந்திர சாதனங்களின் மேல் தனக்கு விருப்பமில்லாமையை வெளிப்படுத்துகிறார். 1921 ஜனவரி 19-ம் நாளைய 'யங் இந்தியா'வில் காந்தியார் எழுதுகிறார்:

"முன்னேற்றக் கடிகாரத்தின் முட்களைப் பின்னோக்கித் தள்ள நான் கோருகிறேனா? ஆலைகளுக்குப் பதில் கையால் நூற்பதையும் கைநெசவையும் மேற்கொள்ளும்படி நான் கோருகிறேனா? இரயில்வேக்குப் பதிலாகக் கட்டை வண்டியைப் பயன்படுத்தும்படி நான் கோருகிறேனா? இயந்திர சாதனங்களை முற்றுமுழுவதுமாக அழித்துவிடும்படி நான் கோருகிறேனா? என்ற கேள்விகளையெல்லாம் செய்தியாளர்களும் பொது மக்களும் என்னிடம் எழுப்புகின்றனர். இயந்திர சாதனங்கள் மறைந்து போவதற்காக நான் அழுது புலம்பமாட்டேன். அவை மறைந்து போவதை நான் ஒரு பேரழிவாகக் கருதவும் மாட்டேன் என்பதே என் பதில்."

சர்க்காவை (இராட்டையை) அவர் துதிப்பதும், கையால் நூற்பது, கைநெசவு ஆகியவற்றை அவர் வலியுறுத்துவதும், இயந்திர சாதனங்களுக்கு அவர் காட்டிய எதிர்ப்புக்குச் சான்றாக நிற்கின்றன. இயந்திர சாதனங்களைக் குறித்த அவருடைய எதிர்ப்பும் சர்க்கா மீது அவர் காட்டிய அன்பும் ஏதோ தற்செயலான ஒரு விஷயமே அல்ல. வாழ்க்கைத் தத்துவம் பற்றிய அவருடைய செய்திகளே அவை. 1925 ஜனவரி 8-ம் நாளன்று நடந்த கதியவாட் அரசியல் மாநாட்டில் காந்தியார் இத்தத்துவத்தை முன்வைப்பதற்கான சிறந்ததருணமாக தன் தலைமையுரையைக் கொண்டார். காந்தியார் கூறுவதாவது:

''எண்ணில் அடங்காமல் பலமடங்காகப் பல்கிப் பெருகும் உயிரற்ற இயந்திரங்களைத் தொழுது நின்று தேசங்கள் அலுத்துப் போய்விட்டன. நம்முடைய உடம்புகளைத் துருவேற விட்டுவிடுவதன் மூலமும், அதற்குப் பதிலாக உயிரற்ற இயந்திரங்களை இட்டு நிரப்புவதாலும், ஒப்பற்ற வாழும் இயந்திரங்களாகிய நம்மை நாமே அழித்துக் கொள்கிறோம். உடம்பு என்பது முழுமையாக உழைப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது கடவுளின் சட்டம். அதைப் புறக்கணிக்க நாம் துணியக் கூடாது. சரீரயக்ஞம் அதாவது உடலுழைப்பு என்பதன் மங்கலச் சின்னம் நூற்கும் இராட்டையே. உடலுழைப்பாகிய இத்தியாகத்தைச் செய்யாமல் தன் உணவைத் தின்னுகிறவனும், திருடனேசெய்கிறான். இத்தியாகத்தைக் கைவிடுவதன் மூலம் நாம் நாட்டுக்குத் துரோகம் இழைத்தவர்களானோம்; அதிர்ஷ்ட தேவதையின் முகத்தில் கதவை அறைந்து சாத்தி விட்டோம்''

''இந்து சுயராஜ்யம்'' (இந்திய உள்ளாட்சிச் சட்டம்) என்ற காந்தியாரின் நூலைப் படித்தவர் எவராயினும் காந்தியார் நவீன நாகரீகத்திற்கு எதிரானவர் என்பதைத் தெரிந்து கொள்வார். இந்நூல் முதலில் 1908-ல் பதிப்பிக்கப்பட்டது. எனினும் அவருடைய கருத்தமைவிலே மாற்றமேதும் இல்லை.

1921-ல் எழுதும்போது காந்தியார் கூறுகிறார்• ''நவீன நாகரிகத்தைக் கடுமையாகக் கண்டனம் செய்வது அந்நூல். அது 1908-ல் எழுதப்பட்டது. என்னுடைய அந்தத் திடமான நம்பிக்கை முன்பு எப்போதும் இருந்ததையும்விட தற்போது ஆழ்ந்ததாகி இருக்கிறது. இந்தியா 'நவீன நாகரிகத்தை' கைகழுவு மேயானால் அவ்வாறு செய்வதன் மூலம் அது ஆதாயமே அடையும் என்றே நான் நம்புகிறேன்.''

காந்தியாரின் பார்வையில் •• ''மேற்கத்திய நாகரிகம் சாத்தான் உருவாக்கியது'' ஆகும். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் மற்றும் நிலக்கிழார்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையில் எழும் வர்க்க யுத்தத்தையும்-ஏன் வர்க்கப் போராட்டத்தையும் கூட நீக்குவதே காந்தியாரின் இரண்டாவது குறிக்கோள். 1921 ஜூன் 8-ல் ''நவஜீவன்''-ல் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையேயான உறவு பற்றிய காந்தியாரின் நோக்குகள் அவரால் முன்வைக்கப்பட்டன. அதிலிருந்து ஒரு பகுதி இதோ;

இந்தியாவுக்கு முன்னால் இரண்டு வழிகள் திறந்திருக்கின்றன. ஒருவழி 'வல்லவன் வகுத்ததே

---

• யங் இந்தியா, 26 சனவரி 1921.

•• தர்ம மந்தன் பக். 65.

ஷரீய்க்கால்’’ என்றும் மேற்கத்தியக் கொள்கையைப் புகுத்துவது. பிறிதொருவழி, கீழைக்கொள்கையானது: வாய்மையே வெல்லும், வாய்மைக்கு அழிவில்லை, வலியோரும் மெலிந்தோரும் நியாயத்தைப் பெறுவதில் ஒத்த உரிமையுடையவர்கள் என்பது. நம் தேர்வு உழைக்கும் வர்க்கத்தில் இருந்து தொடங்க வேண்டும். உழைப்பாளிகள் தங்கள் ஊதியத்தில் ஒரு உயர்வை வன்முறை வழியாக அடைய வேண்டுமா? அது சாத்தியமே என்றாலும், அவர்களது கோரிக்கைகள் எந்த அளவுக்கு நியாயமானவையாக இருந்தபோதும் கூட அவர்கள் வன்முறை போன்ற வழிவகைகளை மேற்கொள்ளக் கூடாது. உரிமைகளைப் பெற வன்முறையைப் பயன்படுத்துவது எளியதொரு வழியாகத் தோன்றலாம். ஆனால், காலப்போக்கில் அவ்வழி வருத்துவதாக ஆகிநிற்கும். வாளால் வாழ்கிறவர்கள் வாளாலேயே அழிகிறார்கள். நீந்துபவர்கள் பலசமயங்களில் நீரில் மூழ்கியே சாகிறார்கள். ஐரோப்பாவைப் பாருங்கள். அங்கு எவருமே திருப்தி அடைந்தவராக இல்லை. அதனாலே அங்கு எவருமே மகிழ்ச்சியோடு இருப்பவராகத் தெரியவில்லை. உழைப்பாளி முதலாளியை நம்புவதில்லை; முதலாளி தொழிலாளிமேல் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இருவருமே ஒருவகையான வீரியத்தையும் வலிமையையும் பெற்றுள்ளனர். ஆனால் எருதுகளும் கூட வீரியத்தையும் வலிமையையும் பெற்றுள்ளன. அவர்கள் கசப்பான ஒரு முடிந்த முடிவுவரை போராடுகின்றனர். நடப்புகள் எல்லாமே முன்னேற்றமாகி விடமாட்டா. ஐரோப்பிய மக்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என நம்புவதற்கான காரணம் ஏதும் நமக்கு இல்லை. அவர்கள் செல்வம் படைத்தவர்கள் என்பதால் ஒழுக்கநெறியும் ஆன்மீக நெறியும் உடையவர்களென்று சொல்லிவிட முடியாது.’’

அப்படியென்றால் நாம் செய்யவேண்டிய தென்ன? பம்பாய்த் தொழிலாளர்கள் ஒரு அழகான நிலையை எடுத்தார்கள். எல்லா உண்மைகளையும் தெரிந்து கொள்ளக் கூடிய நிலையில் நான் இருக்க வில்லை. ஆனால் இதனிலும் நல்லதொரு முறையில் அவர்கள் போராடியிருக்க முடியும் என்பதை என்னால் சொல்லமுடியும். தவறு முழுவதுமே ஆலை முதலாளி யின் மேல் இருக்கலாம். மூலதனத்துக்கும் உழைப்புக் கும் இடையிலே ஆன போராட்டத்தில் குற்றவாளிக் கூண்டிலே பெரும்பகுதி நிற்க வேண்டியவர்கள் முதலாளிகளே எனப் பொதுவாகக் கூறலாம். ஆனால், உழைப்பாளிகள் வலிமையை முழுவதுமாக உணர்ந்து நிற்கையில் முதலாளிகளைவிடக் கொடுமை நிறைந்த வர்களாக ஆகிவிடுவர். ஆலை முதலாளிகளின் அறிவுக் கூர்மையைத் தொழிலாளர்கள் ஆளமுடியும் என்றால், தொழிலாளர்கள் பிறப்பிக்கும் ஆணைக்கு ஏற்ப ஆலை முதலாளிகள் நடக்க வேண்டியிருக்கும். எவ்வாறாயினும் அவ்வளவு அறிவுக் கூர்மையை உழைப்பாளிகள் ஒரு போதும் அடையமாட்டார்கள் என்பது தெளிவானது. அந்த அளவுக்குத் தொழிலாளிகள் அறிவு பெற்று விட்டால், தொழிலாளிகள் தொழிலாளிகளாக இல்லா மல் எஜமானனாகி விடுவார்கள். முதலாளிகள் பணவலி மையை ஆதாரமாகக்கொண்டு மட்டும் போரிடவில்லை. முதலாளிகளுக்கு அறிவுக் கூர்மையும் யூகமும் இருக்கிறது.

நம் முன்னே உள்ள கேள்வி இதுவே: தொழி லாளர்கள் தொழிலாளர்களாகவே நீடித்து இருக்கை யில் தங்கள் போக்கு என்னவாக இருக்கவேண்டும் என்பது பற்றிய உள்ளுணர்வை வளர்த்துக் கொண்டுள் ளனரா? தங்கள் எண்ணிக்கையை அல்லது மிருகத் தையொத்த சக்தியை அதாவது வன்முறையை

அவர்கள் சார்ந்திருந்தால் அது தற்கொலைக்குச் சமமானதே. அவ்வாறுசெய்வதால் நாட்டிலுள்ள தொழிற்சாலைகளுக்கு அவர்கள் தீங்கு விளைவிப்பார்கள் மாறாக கலப்படமற்ற நியாயத்தின் அடிப்படையில் அவர்கள் தங்கள் நிலை என்னவென முடிவெடுத்து, ஒவ்வொருவரும் அந்நிலைக்காக வருந்தி உழைத்தால் அவர்கள் எப்போதுமே வெற்றி பெறுவார்கள் என்பதோடு; எஜமானனையும் சீர்திருத்தி தொழிற்சாலைகளையும் வளர்ச்சிபெறச் செய்வார்கள்; எஜமானனும் தொழிலாளர்களும் ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள்''.

இப்பொருள் குறித்து இன்னொரு தருணத்தில் காந்தியார் குறிப்பிடுகிறார்.

''இதற்கு முன்னருங்கூட அது மாறுபட்டு இருந்ததில்லை. இந்திய வரலாறு, முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையேயான இழுபறியான உறவுகளின் ஒரு வரலாறல்ல''

தங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தை ஒரு கருவியாகக் கையாளுவது குறிந்து காந்தியாரின் கருத்துகள் தனிக்கவனத்துக்கு உரியவை. காந்தியார் கூறுகிறார்.

''எனவே மிகப்பெரிய வெற்றிகரமான வேலை நிறுத்தங்களைக் கையாண்டவன் என்கிற முறையிலே பேச முற்படும்போது, இப்பக்கங்களில் ஏற்கனவே

---

• யங் இந்தியா பிப்ரவரி 23, 1922.

•• யங் இந்தியா ஆகஸ்டு 11, 1921. அழுத்தம் என்னுடையது.

சொல்லப்பட்டுள்ள நெறிமுறைகளை வேலை நிறுத்தத் தலைவர்களுக்கு வழிகாட்டுதல்களாக மீண்டும் தருகிறேன்.

***1. உண்மையான குறைபாடு எதுவுமே இல்லாதபோது வேலைநிறுத்தம் எதுவுமே கூடாது.***

2. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர் தங்கள் சொந்தச் சேமிப்பின் வாயிலாகவோ, பஞ்சடித்தல், நூற்றல், நெய்தல் போன்ற தொழில்களைத் தற்காலிகமாக மேற்கொண்டோ தாங்களாகவே தாக்குப் பிடித்துக் கொள்ள முடியாதபோது வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடாது. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர் ***பொதுமக்களிடமிருந்தோ அல்லது மற்ற அற நிறுவனங்களிடமிருந்தோ கிடைக்கும் நன்கொடைகளை ஒருபோதும் சார்ந்திருக்கக் கூடாது.***

***3. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர் ஒரு மாற்றப்பட முடியாத குறைந்தபட்ச கோரிக்கையை நிர்ணயிக்க வேண்டும் வேலை நிறுத்தத்தில் இறங்குமுன் அக்கோரிக்கையை அறிவித்து விடவும் வேண்டும்.***

''நியாயமான குறைபாடு ஒன்றை முன்வைத்து நடத்தப்படும்போது கூட, மற்றும் காலவரையறையின்றி நடத்தும் திறனை வேலை நிறுத்தம் செய்வோர் பெற்றிருப்பினுங்கூட, வேலை நிறுத்தம் செய்வோருக்குப் பதிலாக மாற்றுத் தொழிலாளர்கள் இருந்தால் வேலை நிறுத்தம் தோல்வியுறலாம். எனவே மற்றொருவரைத் தன் பணியில் நியமிப்பதன் மூலம்,

தான் எளிதாகப் பணியிலிருந்து நீக்கப்படலாம் என உணர்ந்தால் அறிவுள்ள ஒரு மனிதன் ஊதிய உயர்வுக்காகவோ அன்றி மற்ற வசதிகளுக்காகவோ வேலை நிறுத்தம் செய்யமாட்டான். ஆனால், உட்னொத்த மக்களின் உயர்வுக்கு உழைக்கிற அல்லது தேசப் பற்றுடைய ஒரு மனிதன் அண்டை அயலாரின் துன்ப துயரங்களுக்கு வருந்தி அவற்றில் பங்கேற்க விரும்பினால் தேவையைவிட அதிகமாகப் பெறும் நிலையிலும் வேலை நிறுத்தம் செய்வான். அச்சுறுத்தல், தீக்கிரையாக்கல் அல்லது மற்ற வன்முறையின் வடிவங்களுக்கு என்னால் விவரிக்கப்பட்ட இயல்பு கொண்ட சாந்தமான வேலை நிறுத்தத்தில் ஒரு சிறிதும் இடமில்லையென்பது சொல்லாமலே விளங்கும். என்னால் முன்வைக்கப் பட்ட சோதனைகளைச் சீர்தூக்கிப் பார்ப்போம். அப்போது வேலை நிறுத்தம் செய்தோர் தங்கள் ஆதரவுக்காக காங்கிரசுக்கோ அன்றி மற்ற பொது நிதிகளுக்கோ வேண்டுகோள் விடுக்கும் பொருட்டோ அவைகளிடமிருந்து எந்த ஆதரவையும் பெறும் பொருட்டோ வேலை நிறுத்தம் செய்தோரின் நண்பர்கள் அவர்களுக்கு ஒருபோதும் அறிவுரை வழங்கவில்லை என்பது தெளிவாகும். நிதியுதவியை எந்த அளவுக்குப் பெறுகிறார்களோ அல்லது ஏற்றுக் கொள்கிறார்களோ அந்த அளவுக்கு வேலை நிறுத்தம் செய்வோரின் மீதுள்ள அனுதாபத்தின் மதிப்பும் குறையும். அனுதாபிகள் சங்கடத்திற்கும் இழப்பிற்கும் ஆளாவதில்தான் அனுதாபத்தோடு கூடிய வேலை நிறுத்தத்தின் வெற்றியே அடங்கியிருக்கிறது.''

உத்தரப்பிரதேசத்தில் நிலக்கிழார்களுக்கு எதிராகக் குத்தகைதாரர்கள் எழுச்சி கொண்டபோது, குத்தகைதாரர்களுக்கான குறிப்புகளாக, 1921 மே 18-ல் காந்தியார் நிலக்கிழார்களுக்கும் குத்தகைதாரர்

களுக்கும் இடையிலான உறவு பற்றிய தம் கருத்துக்களைக் கூறுகிறார்.

உத்திரப்பிரதேச அரசாங்கம் தன் தகுதியின் எல்லையைத் தாண்டி மக்களை அச்சுறுத்தி நிற்கிறது. அதே வேளையில், உழவர்களும் புதியதாக உருவாக்கப் பட்ட தங்கள் அதிகாரத்தை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதில்லை என்பதில் ஒரு சிறிதும் ஐய மில்லை. பல ஜமீன்தாரி பகுதிகளில் அவர்கள் எல்லை மீறிவிட்டார்கள் என்று மட்டுமல்ல, சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டார்கள். தம்மைப் போலவே நடந்து கொள்ளாதவர்களிடம் பொறுமையிழந்து போனார்கள் என்றெல்லாம் கூறப்படுகிறது. அவர்கள் சமூகப் புறக்கணிப்பைத் தவறாகப் பயன்படுத்துகிறார் கள்; அதை வன்முறைக்கான ஒரு கருவியாக மாற்று கிறார்கள். தண்ணீர் வழங்கல், முடிதிருத்துதல் மற்றும் பணத்தால் அடையும் மற்ற தொண்டுகள் ஆகிய வற்றை ஜமீன்தாரர்களுக்குக்கிட்டாமல் நிறுத்திவிட்டார் கள் என்றும், அவர்களுக்குரிய குத்தகையையும் கொடுக் காமால் நிறுத்திவிட்டார்கள் என்றும் கூறப்படுகிறது. ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து ''கிசான் இயக்கம்'' ஒரு உத்வேகத்தைப்பெற்றிருக்கிறது. ஆனால் 'கிசான் இயக்கம்' ஒத்துழையாமை இயக்கத்நுக்கு முந்தை யதும் தொடர்பற்றதும் ஆகும். இயக்கம் நடவடிக்கையில் இறங்குகிறபோது அரசுக்கு வரி கொடுப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி விவசாயி களுக்கு அறிவுறுத்த நாம் தயங்கமாட்டோம் எனகிற அதேவேளையில் ஜமீன்தாரர்களுக்கு உரிய குத்தகையை இழக்கச் செய்ய ஒத்துழை யாமை இயக்கத்தின் எந்தக் கட்டத்திலும் நாம் முனைவோம் என்று எண்ணுவதற்குக் கூட இட மில்லை. கிசான இயக்கம், கிசான்களின் சமூக

*நிலையை உயர்த்துவது மற்றும் ஜமீன்தாரர்களுக்கும் கிசான்களுக்கும் இடையிலான உறவை மேம்படுத்துவது ஆகிய எல்லைகளுக்குள் தன்னை இருத்திக் கொள்ள வேண்டும்* ஜமீன்தார்களுடன் கிசான்கள் செய்துகொண்ட உடன்படிக்கை எழுத்து வடிவில் ஆனதாயினும் சரி, வழக்கத்தால் வந்ததாயினும் சரி உடன்படிக்கையின் அம்சங்களுக்கு உண்மையாக நடந்துகொண்டாக வேண்டும் என கிசான்கள் உரியவாறு அறிவுறுத்தப்படவேண்டும். ஒரு வழக்கமோ அல்லது எழுத்தாலான ஒப்பந்தமோ தீங்கானது என்றால் அவர்கள் அதை வேரொடு களைந்தெறிய வன்முறையாலோ அல்லது ஜமீன்தாரர்களுக்கு முன்னரே அறிவிக்காமலோ முயலக்கூடாது. ஒவ்வொரு பிரச்சினையிலும் ஜமீன்தாரர்களுடன் நேசத்தோடு கூடிய விவாதம் நடத்தப்பட வேண்டும்; தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.''

காந்தியார் உடைமை வர்க்கத்தைப் புண்படுத்த விரும்பவில்லை. அவர்களுக்கு எதிரான நடவடிக்கையையும் கூட அவர் எதிர்க்கிறார். பொருளாதார சமத்துவத்தின் மேல் அவருக்கு இசைவில்லை. உடைமை வர்க்கத்தைப் பற்றிப் பேசுகையில் மிக அண்மைக் காலத்தில் காந்தியார் கூறுகிறார். ''பொன் முட்டை இடும் வாத்தைக் கொல்வதை நான் விரும்பவில்லை'' உடைமையாளர்- உழைப்பாளர், பணக்காரன் ஏழை, நிழக்கிழார் - குத்தகைதாரர், முதலாளி - தொழிலாளி ஆகியோருக்கு இடையேயான பொருளாதாரப் பிணக்குகளுக்குக் காந்தியார் காணுகிற தீர்வு மிக எளிமை

அழுத்தம் என்னுடையது

யானது. உடைமையாளர்கள் தங்கள் உடைமையை இழக்கத் தேவையில்லை. அவர்கள் செய்ய வேண்டிய தெல்லாம் ஏழைகளின் தர்மகர்த்தாக்களாகத் தங்களை அறிவித்துக் கொள்ள வேண்டும் என்பதே. இத்தர்ம கர்த்தா (Trustee) நிறுவனம் ஒரு ஆத்மார்த்தமான பணியை மேற்கொண்டுள்ள ஒரு தன்னிச்சையான (Voluntary) நிறுவனமே.

பொருளாதாரப்பிணிகள் பற்றிய காந்தியப் பகுப்பாய்விலே புதுமையானது எதுவும் இருக்கிறதா? காந்தியத்தின் பொளாதாரம் பழுதற்றதா? சாதாரண மனிதனுக்கு, தாழ்நிலையிலும் தளர்ந்து போயும் இருக் கிறவர்களுக்கு காந்தியம் அளிக்கும் நம்பிக்கை தான் என்ன? மேம்பாடான ஒரு வாழ்க்கை, மகிழ்ச்சியும் பண்பாடும் கொண்ட ஒரு வாழ்க்கை, விடுதலையோடு கூடிய ஒரு வாழ்க்கை, தேவைகளிலிருந்து விடுதலை என்பதோடு மாத்திரமல்லாது ஏற்றம் எழுச்சிக்கான விடுதலை, தன் தகுதிகளால் அடையக் கூடிய முழு உயர்வுக்கான வளர்ச்சிக்கு விடுதலை ஆகியவை கிட்டு மென அது உறுதி கூறுகிறதா?

இயந்திர சாதனங்கள் மற்றும் அவற்றின் மேல் கட்டப்பட்டுள்ள நவீன மக்கட்பண்பாடு ஆகியவற்றால் உருவாகும் பொருளாதாரப் பிணிகளைப் பொறுத்த மட்டில், காந்தியாரின் பகுத்தாய்வில் இதுவரைசொல்லப் படாத புதுமை எதுவுமே இல்லை. இயந்திர சாதனங் களும் நவீன மக்கட்பண்பாடும் நிர்வாகத்தையும் கட்டுப் பாட்டையும் முன்னம் இருந்ததை நோக்க ஒரு சில கரங்களுக்குள்ளேயே குவிக்கத் துணைபோகின்றன.

தங்கள் குடிசைகளில் இருந்து பல்லாயிரக்கணக் கான மைல்கள் தள்ளியுள்ள மிகப் பெரிய இயந்திரத்

தொழிற்சாலைகளைத் தாங்கி நிறுத்த உழைத்து ஓடாகிற பல நூறாயிரக்கணக்கான மக்கள் பணிபுரியும் ஆலைகளும் தொழிற்சாலைகளும் வங்கிகள் மற்றும் பணவைப்பின் உதவியோடு, மேற்கூறியதைவிட மிகச் சிறிய அளவினரான ஒரு சிலரிடம் மாற்றுவதை ஊக்குவிக்கின்றன. பெரும்போர் ஒன்றால் ஏற்படக்கூடிய இழப்புகளைக் காட்டிலும் மிகமிக அதிகமாக, மரணங்களும், ஊனங்களும், உருச்சிதைவுகளும் இயந்திர சாதனங்களாலும் நவீனமக்கள் பண்பாட்டாலும் ஏற்படுகின்றன. மற்றும் புகை, அழுக்கு, இரைச்சல், அசுத்தக் காற்று, சூரிய ஒளிக்குறைவு, வாழ்க்கைக்குத் தேவையான போதுமான திறந்தவெளி இன்மை, சேரிகள், விபச்சாரம் இவற்றோடு கூடிய பெருநகரங்கள் உருவாதல், இவை தோற்றுவிக்கும் இயற்கைக்குப் புறம்பான வாழ்க்கை முறை ஆகியவற்றின் காரணமாக நேரடியாகவோ மறைமுகமாகவோ பிணிகளுக்கும் உடல் சீர்கேட்டுக்கும் இயந்திர சாதனங்களும் நவீன மக்கட்பண்பாடுமே பொறுப்பானவை என்பதெல்லாம் பழையதும் உளுத்துப்போனதும் ஆன வாதங்களே! அவ்வாதங்களில் புதுமையானது எதுவுமே இல்லை. ரூசோ, ரஸ்கின், டால்ஸ்டாய் மற்றும் அவர்தம் கூட்டத்தாரின் கருத்துகளையே வெறும் கிளிப்பிள்ளை போலக் கூறி நிற்கிறது காந்தியம்.

காந்தியத்தின் அடித்தளக் கருத்துக்கள் வரலாற்றுக்கு முந்தைய காலத்தவை. காந்தியம் என்பது மிருக வாழ்க்கை என்ற இயற்கை முறைக்குத் திரும்புதலே. காந்தியக் கருத்துகளின் ஒரே சிறப்பு அவற்றின் எளிமையே. அவற்றால் ஈர்க்கப்பட்டுள்ள மனிதர்கள் எப்போதுமே பெரும் எண்ணிக்கையிலான எளிமையான மனிதர்களாய் இருப்பதால் இதுபோன்ற எளிமையான கருத்துகள் ஒருபோதும் சாவதில்லை. அவற்றின்

பெருமைகளை எடுத்தியம்பும் பேதைகளும் எப்போதும் இருந்தே வருவர். எவ்வாறாயினும், மனிதர்களுடைய மிகஅரிதாகவே தவறாகிற நடைமுறை உள்ளுணர்வுகள் காந்திய கருத்துகள் பயனற்றவை என்பதைக் கண்டு கொண்டுள்ளன. முன்னேற்றத்தைத் தேடி நிற்கும் சமூகம் இக்கருத்துகளைப் புறகணிப்பதே மிகச்சிறந்தது என எண்ணியது என்பதில் வியப்பேதும் இல்லை.

காந்தியத்தின் பொருளாதாரமோ, நம்பிக்கைக்கே இடமளிக்காத பிழைபட்டவாதமாய் இருக்கிறது. இயந்திர சாதனங்களும் நவீன மக்கட்பண்பாடும் பல தீங்குகளை உண்டாக்கியிருக்கின்றன. என்ற உண்மையை ஒப்புக்கொள்ளவும் செய்யலாம். ஆனால், இத் திங்குகளே இயந்திரசாதனங்களுக்கும் நவீன மக்கட்பண்பாட்டுக்கும் எதிரான வாதம் அல்ல. ஏனெனில் இத் தீங்குகள் இயந்திர சாதனங்களாலோ, நவீன மக்கள் பண்பாட்டாலோ ஏற்பட்டவை அல்ல. தனியுடைமையையும், தனிமனித இலாபவேட்டையையும் முற்றிலும் புனிதமான செய்திகளாக ஆக்கிவைத்திருக்கிற தவறான சமூக அமைப்பு காரணமாக எழுந்தவையே இத்தீங்குகள். இயந்திர சாதனங்களும் மக்கள் பண்பாடும் ஒவ்வொருவருக்கும் பயன்தரவில்லை என்றால் பரிகாரம்தான் என்ன? இயந்திர சாதனங்களும் மக்கள் பண்பாடும் பயன்தரத் தக்கவையல்ல எனப் பழிப்பதல்ல - அப்பயன்கள் ஒரு சிலரால் பறித்துக் கொள்ளப் படாமல் எல்லோரையும் சென்றடையும் வகையில் சமூக அமைப்பை மாற்றி அமைப்பதே தக்க பரிகாரமாகும்.

காந்தியத்திலே சாதாரண மனிதனுக்கு நம்பிக்கை தரத்தக்க எதுவுமே இல்லை. காந்தியம் மனிதனை ஒரு மிருகமாகவே கையாளுகிறது. மிருகத்திலும் மேம்

பட்ட ஒரு உயிராக அல்ல. உருவ அமைப்பு மற்றும் உணவு, இனப்பெருக்கம் போன்ற செயல்பாடுகள் மனிதனுக்கும் மிருகத்துக்கும் பொதுவானவையே. ஆனால் இவை (விலங்கினத்தில் இருந்து மொ. பெ) வேற்றுமைப்படுத்தி நிற்கிற மனிதச் செயல்பாடுகள் அல்ல. வேறுபடுத்தும் மனிதச் செயல்பாடு பகுத்தறிதலே. கவனித்தல், ஆழ்ந்து சிந்தித்தல், ஆழ்ந்து ஆராய்தல் பிரபஞ்சத்தின் அழகுகளை ஆய்தல் மற்றும் கண்டுபிடித்தல். தன் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளுதல், தன் வாழ்க்கையிலுள்ள மிருக இயல்புகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது, பகுத்தறிதலே. இவ்வாறாக மனிதன் உயிரின வாழ்க்கை அமைப்பின் மிக உயர்ந்த இடத்திலே இருப்பவன் ஆகிறான். இது உண்மையென்றால், உடனடியாக ஏற்படும் முடிவு என்ன? ஒரு மனிதனின் உடற்பசிகள் தீர்க்கப்பட்டுவிடும் போதே ஒரு காட்டுமிராண்டியின் இறுதிக் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டு விடுகிறது. ஆனால் மனிதன் தன் மனதை முழுமையாகப் பண்படுத்திக் கொள்ளாதவரை மனித வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோள் எட்டப்படவில்லை என்பதே அம்முடிவு. சுருங்கச் சொன்னால் மனிதனையும் மிருகத்தையும் வேறுபடுத்துவது பண்பாடே. காட்டுமிராண்டிக்குப் பண்பாடு சாத்தியமானதல்ல. மனிதனுக்கோ பண்பாடு இன்றியமையாதது. ஆதலால் மனித சமூகத்தின் நோக்கம், ஒவ்வொரு மனிதனும் பண்பாட்டோடு கூடிய வாழ்க்கையை நடத்த ஆற்றலளிப்பதாக, அதாவது வெறும் பௌதீகத் தேவைகளை (Physical wants) மட்டுமே நிறைவு கொள்வதிலிருந்து மாறுபட்டு மனதைப் பண்படுத்தும் ஆற்றலளிப்பதாக இருத்தல் வேண்டும். இது எப்படி இயலும்?

சமூகத்தைப் பொறுத்தவரையானாலும் சரி, தனிமனிதனைப் பொறுத்தவரையானாலும் சரி, வெறுமனே வாழ்வதற்கும், பயன்பட வாழ்வதற்கும் இடையே எப்போதுமே ஒரு பெருத்த இடைவெளி இருக்கிறது. ஒருவர் பயன்பட வாழவேண்டும் என்றால் முதற்கண் அவர் உயிரோடு இருக்க வேண்டும். (மிருகங்களில் இருந்து) வேறுபடுத்திக் காட்டுகிற மனித இயல்புகளைக் கொண்ட நடவடிக்கைகளுக்குக் கிடைக்கக் கூடியதும், பண்பாடுள்ள வாழ்க்கையை உருவாக்குவதற்குமான காலத்தையும், ஆற்றலையும் வெறுமனே வாழ்வதிலும், பிழைப்பைத் தேடுவதிலும் செலவிடப்படும் காலமும் ஆற்றலும் கணிசமாகக் குறைக்கின்றன. அப்படியிருக்க, பண்பாட்டோடு கூடிய ஒரு வாழ்க்கையை எப்படித்தான் வந்தடைவது? போதுமான ஓய்வு இல்லாவிட்டால் அத்தகைய ஒரு வாழ்க்கையை வந்தடையவே முடியாது. ஏனெனில் ஓய்வு கிடைக்கும்போது மட்டுமே, மனிதன் தன்னைத் தானே பண்பாடுள்ள ஒரு வாழ்க்கைக்கு ஈடுபடுத்திக் கொள்கிறான். எனவே, ஒவ்வொரு தனிமனிதனுக்கும் எப்படி ஓய்வளிப்பது என்பதே மனிதச் சமூகம் எதிர் கொள்ளவேண்டிய பிரச்சினைகளில் எல்லாம் தலையாய பிரச்சினை. ஓய்வு என்பது என்ன? வாழ்க்கையின் பௌதீகத் தேவைகளை நிறைவேற்றத் தேவையான கடின உழைப்பையும் - முயற்சியையும் குறைப்பதே ஓய்வு என்பதன் பொருளாகும். எப்படி ஓய்வு கிட்டும்படிச் செய்யலாம்? மனிதத்தேவைகளை நிறைவு செய்வதற்கான பொருட்களை உற்பத்தி செய்யத் தேவையாயுள்ள உழைப்பைக் குறைக்கும் சில வழி வகைகள் கண்டுபிடிக்கப்படாவிட்டால் ஓய்வுஒருபோதும் கிட்டாது. அத்தகைய கடும் உழைப்பைக் குறைக்கக் கூடியது எது? மனிதன் செய்யும் வேலைகளை இயந்

திரம் செய்வதே ஓய்வை உருவாக்கும் வழிவகைகள்; வேறெவையும் இல்லை. இவ்வாறாக ஒரு காட்டு மிராண்டியின் வாழ்க்கையை நடத்துவதிலிருந்து மனிதனை விடுவிப்பதற்கும், மனிதனுக்கு ஓய்வளிக்கவும், பண்பாடுள்ள ஒரு வாழ்க்கை கிட்டச்செய்யவும், இயந்திர சாதனங்களும் மக்கள் பண்பாடும் இன்றியமையாதவை ஆகின்றன. இயந்திர சாதனங்கள் மற்றும் நவீன மக்கள் பண்பாடு ஆகியவற்றின் நோக்கத்தையும் மனிதச் சமுதாயம் போராடி எட்டிப் பிடிக்க வேண்டிய இறுதியான குறிக்கோள் என்ன என்பதையும் ஒரு சிறிதும் புரிந்து கொள்ளாதவனே இயந்திர சாதனங்களையும், நவீன மக்கள் பண்பாட்டையும் பயனற்றதெனப் பழிக்கிறான்.

ஜனநாயகத்தைத் தன்னுடைய இலட்சியமாக ஏற்றுக் கொள்ளாத ஒரு சமுதாயத்திற்கு காந்தியம் மிகவும் ஏற்றதாக இருக்கலாம். ஜனநாயகத்தில் நம்பிக்கை கொள்ளாத ஒரு சமுதாயம் இயந்திர சாதனங்கள் மற்றும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட மக்கட் பண்பாடு இவற்றை அலட்சியப் படுத்தலாம் ஆனால் ஜனநாயக சமுதாயம் அவ்வாறு செய்ய இயலாது. ஒரு சிலருக்கு ஓய்வும் பண்பாடும் உள்ள ஒரு வாழ்க்கையும் மிகப் பலருக்கு கடும் உழைப்பும் கேவலப் பிழைப்பும் ஆன வாழ்க்கையும் அமைந்திருப்பதிலேயே முந்தைய சமூகம் மனநிறைவு கொள்ளலாம். ஆனால் ஒரு ஜனநாயக சமுதாயமோ தன்னுடைய ஒவ்வொரு குடிமகனுக்கும் ஓய்வும் பண்பாடும் உள்ள ஒரு வாழ்க்கை கிட்டுமென உறுதியளித்தாகவேண்டும். இந்தப் பகுத்தாய்வு சரியானதென்றால் ஜனநாயகம் பற்றிய முழக்கம் மற்றும் இன்னமும் மேம்பட்ட பண்பாடு எல்லாமே அவ்வழியே பெறக் கூடியவையே. காந்தியத்தின் கீழ் சாதாரணச் சமு

தாயம் இயந்திரத் தன்மை கொண்டதாக மேலும் கூடுதலான இயந்திரத்தன்மை கொண்டதாகஇருந்தாக வேண்டும்; பண்பாடு என்பதோ மனிதன் பிச்சைக்காசுக் காகவும்(தன்னுள்இருக்கிற) காட்டுமிராண்டித் தனத்திற் காகவும் ஓய்வு ஒழிவின்றி உழைத்துத் தேய்வதே யாகும். சுருங்கச்சொன்னால் இயற்கைக்குத் திரும்புதல் என்னும் தன் அழைப்போடு கூடிய காந்தியத்தின் பொருள்தான் என்ன? பரந்துபட்ட பெருந்திரளான மக்கள். அம்மணமாகத் திரியும் நிலையைத் திரும் பவும் அடைவது, குப்பை மேட்டுக்கே திரும்பவும் குடி போவது, எழ்மையைத் திரும்பவும் ஏற்றுக்கொள்வது, அறிவின்மைக்குத் திரும்பவும் ஆட்படுவது என்பதே.

வாழ்க்கையை வெவ்வேறு செயல்பாடுகள் கொண்டதாகவும், சமுதாயத்தை வெவ்வேறு வர்க்கங் கள் கொண்டதாகவும் பிரிப்பது ஒரேயடியாக மூடி மறைத்துவிட முடியாததாய் இருக்கலாம். சமுதாய மற்றும் பொருளாதார மாற்றங்கள் எத்தனையோ இருந்த போதுங்கூட சட்டபூர்வமான பண்ணையாள் முறையும் சட்டபூர்வமான அடிமைத்தனமும் ஒழிக்கப் பட்டுவிட்ட போதுங்கூட, ஜனநாயகம் பற்றிய கருது கோள் பரவிநின்ற போதுங்கூட, விஞ்ஞானப் பரவல், புத்தகங்கள், செய்தித்தாள்கள், பயணங்கள் போன்ற வற்றின் வாயிலாகப் பொதுஅறிவு பரவியபோதுங்கூட. பள்ளிகளிலும் ஆலைகளிலும் பொதுவானதொரு கலந்துறவாடுதல் இருந்தபோதுங்கூட, சமூகத்தில் கல்வியுடைமை வர்க்கமும் அறியாமை வர்க்கமும் அது போலவே ஓய்வுடையதும் மற்றும் உழைத்து ஓடாவதும் ஆன வர்க்கமும் ஆகிய பெரும்பிளவு இருக்கவே செய் கிறது. ஒருவேளை இருந்தே வரலாம்.

ஆனால் காந்தியமோ தேசிய வர்க்க வேறுபாடு

களோடு திருப்தி அடைவதாக இல்லை. காந்தியம் வர்க்கக் கட்டமைப்பை வலியுறுத்துகிறது. சமுதாய அமைப்பின் நிரந்தர அம்சங்களாக, ஏழை-பணக்காரன், உயர்ந்தோன் - தாழ்ந்தோன், உடையவன் - உழைப்பாளி ஆகிய உடனடியான வேறுபாடுகளோடு கூடிய வருமானக் கட்டமைப்பையும் சமுதாயத்தின் வர்க்கக் கட்டமைப்பையும் புனிதமானவையாகப் போற்றி நிற்கிறது. சமூகவியல் உடன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்ற கோணத்திலிருந்து பார்க்கும்போது காந்தியத்தை விடக் கேடுபயப்பது எதுவுமே இல்லை. உளவியல் வகையிலோ வர்க்க அமைப்பு இரண்டு வர்க்கங்களுக்குமே கேடுசெய்யும் பாதிப்புகளை செயல் படுத்துகிறது. சிறப்புரிமை கொண்ட வர்க்கமும், மக்கள் வர்க்கமும் சந்திப்பதற்கான பொதுவான தளம் எதுவுமே இல்லை. வாழ்க்கையின் நம்பிக்கை யையும், அனுபவங்களையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் வழியில்லை. மக்கள் திரள் இவ்வாறு பிளவுபட்டிருப்பதால் ஏற்படும் சமூக மற்றும் அறவழிக் கேடுகள் யதார்த்தமாய் இருக்கின்றன; எளிதில் உணரத்தக்கவையாகவே இருக்கின்றன. இந்தத் தனிமைப்படுத்துதல் அவர்களுக்கு அடிமை களாய் ஆகிநிற்கப் பயிற்சி அளிக்கிறது. அடிமை மனப் பாங்கிலிருந்து எழுகிறஎல்லாஉளவியல் சிக்கல்களையும் உருவாக்குகிறது. ஆனால் சிறப்புரிமை வர்க்கத்தைப் பாதிக்கும் தீங்குகளோ மக்கள் வர்க்கத்தின் தீங்கு களைவிட முக்கியமற்றவையாய் இருப்பினும், குறைந்த அளவிலேயே உணரத்தக்கவையாய் இருப்பினும், இரு வர்க்கங்களையும் பாதிக்கும் தீங்குகள் சம அளவிலேயே உண்மையாய் இருக்கின்றன. வர்க்கக் கட்டமைப்பைத் தொடர்ந்து நிற்கிற தனிமைப்படுத்துதலும் பிரத்யேகத் தன்மையும் சிறப்புரிமை வர்க்கங்களிலே சமூக விரோத சதிக்கும்பலின் உணர்வுகளை உருவாக்குகிறது. சிறப்

புரிமை வர்க்கம் ஆனது 'தனக்கே உரிய' சொந்த நல்ன்கள் உள்ளன என உணருகிறது. அவற்றை எல்லோரிடமிருந்தும் அரசின் நலன்களிடமிருந்துங்கூட காப்பதையே தன் தலையாய நோக்கமாகவும் கொண்டிருக்கிறது. வர்க்கக் கட்டமைப்பு அவர்களுடைய பண்பாட்டை மலடாக ஆக்குகிறது; அவர்களுடைய கலையை காட்சிப் பொருள் ஆக்குகிறது; அவர்களுடைய செல்வத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது; அவர்களுடைய நடத்தையை நாசூக்கானதாக ஆக்குகிறது; நடைமுறைப்படி கூறினால் வர்க்கக் கட்டமைப்பு ஒன்றிலே, ஒருபுறம் கொடுங்கோன்மை, மமதை, இறுமாப்பு, அகந்தை, பேராசை, தன்னலம் ஆகியவையும், மறுபுறமோ பாதுகாப்பின்மை, வறுமை, தாழ்வுபடுத்தப்படல் ஆகியனவும் உரிமை, தன்னம்பிக்கை, தற்சார்பு, கௌரவம், தன்மானம் ஆகியவற்றின் இழப்பும் இருக்கின்றன. இவைபோன்ற உடன் விளைவுகளைப் பற்றிய அக்கறை அற்றதாக ஜனநாயக வழிச் சமூகம் இருக்க முடியாது. ஆனால் காந்தியமோ இவ்விளைவுகள் பற்றி ஒருசிறிதும் கவலை கொள்வதாகவே இல்லை. காந்தியம் என்பது வர்க்கக்கட்டமைப்பைவிட மோசமான ஒருஅமைப்பு இருந்தால் அதனோடும்கூட திருப்தி கொள்ளாது என கூறுவதுங்கூடப் போதுமானதாக இராது. காந்தியம் பட்டுப்போன ஒன்று பயனற்றது - பலன்தராதது; ஒரு வெறும் உணர்வுக் கிளர்ச்சியோ - வெறும் உருவக்கூடோ அல்ல காந்தியம் வேண்டுவது. வர்க்கக் கட்டமைப்பு இறவாக் கொள்கையாகச் செயல்பட வேண்டும் என்பதே காந்தியத்தின் தேவையாகும். இதில் வியப்படைவதற்கு எதுவுமே இல்லை. ஏனெனில், காந்தியத்திலுள்ள வர்க்கக் கட்டமைப்பு ஒரு தற்செயலான நிகழ்ச்சியேயல்ல. காந்தியத்தின் அதிகார பூர்வமான கோட்பாடு வர்க்கக் கட்டமைப்பே.

எல்லாப் பிணிகளுக்குமே ஏற்ற மாமருந்தாக தர்மகர்த்தா கொள்கையை காந்தியம் முன்வைக்கிறது. இதன்வாயிலாக, வறியவர்களின் பொருட்டு, பணக்கார வர்க்கங்கள், தங்கள் உடைமைகளை தர்மகர்த்தா ஸ்தாபனங்களில் (trust) வைத்திருப்பார்கள் எனக் கூறுகிறது. இந்த தர்மக்கர்த்தா கொள்கையே காந்தியத்தின் எள்ளி நகையாடத்தக்க பகுதியாய்இருக்கிறது. காந்தியாரைத் தவிர வேறு எவரேனும் இக்கருத்தை முன்மொழிந்திருந்தால் அம்மனிதன் வாழ்க்கையின் கடுமையான உண்மைநிலைகளைஅறியாதவன்எனவும், உடைமை வர்க்கங்களுக்கு (தங்களுடைய திருப்திப் படுத்தப்பட இயலாத பேராவலாலும், அடங்காத அகந்தையாலும் உழைக்கின்ற நூறாயிரக்கணக்கான மக்களுக்கு இந்த உலகைக் கண்ணீரால் நிரப்பப்பட்ட ஒரு பள்ளத்தாக்காக இதுவரை ஆக்கிவந்தவையும் - இனிமேலும் ஆக்கப் போகிறவையுமான உடைமை வர்க்கங்களுக்கு) வர்க்கக்கட்டமைப்பு தந்திருக்கிற மோசமான மாபெரும் அதிகாரங்களை அவ்வுடைமை வர்க்கங்கள் தவறாகப் பயன்படுத்துவதற்கான மனத்தூண்டுதலுக்கு அவர்களைப் பக்குவப்படுத்த ஒரு சிறிதளவு நன்னெறி மருந்தைப்புகட்டுவதே போதுமானதெனப் பேசி ஊழிய வர்க்கங்களை ஏய்ப்பவனாகவும் கொண்டு அவனை ஒரு அற்பமூடனென அனைவரும் பரிகசித்திருப்பார்கள்.

காந்தியத்தின் சமுதாயக் குறிக்கோள் சாதி அல்லது வர்ணம் ஆகும். இவற்றுள் எது காந்தியத்தின் குறிக்கோள் எனக்கூறுவது கடினமேயாயினும் காந்தியத்தின் சமுதாயக் குறிக்கோள் ஜனநாயகமல்ல என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் சாதி, வர்ணம் இரண்டையுமே ஒருவர் ஒப்பிட்டு நோக்கும் போது அடிப்படையிலேயே இவையிரண்டும் ஜனநாயகத்துக்கு எதிரானவையாய் இருக்கின்றன. சாதியமைப்

யைக் கட்டிக்காக்க காந்தியத்தின் உரை வலுவான தாகவோ நேர்மையானதாகவோ இருந்தால் அது வேறுவிதமாய் இருக்கும். ஆனால் ஜாதியமைப்பை கட்டிக்காப்பதற்கான காந்தியாரின் உரை எவராலும் எண்ணிப் பார்க்கவும் இயலாத அளவுக்குக் கருத்தாழ மற்ற, பேச்சுத் திறமையின் மிகமிக மரத்துப் போன ஒரு பகுதியாகவே நிற்கிறது. சாதியை ஆதரித்து நிற்பவையான காந்தியாரின் வாதங்களை ஆய்ந்தறிந் தால் ஒவ்வொரு வாதமும் சிறுபிள்ளைத்தனமான தாகவும் புறத்தோற்றத்தில் அழகோடும் தோன்றி நிற்பதைக் காணலாம்.

மேலே தொகுத்துக் கூறப்பட்ட வாதங்களைப் பார்ப்போம். முதல் மூன்று வாதங்களும் இரக்கத்திற் குரியவை. மற்ற சமூகங்கள் இறந்தொழிந்துவிட்டன அல்லது மறைந் தொழிந்துபோயின என்கிற நிலை யில் இந்துச் சமூகத்தால் நிலைகொண்டு நிற்க முடி கிறது என்பது போற்றுதற்குரிய ஒரு செய்தியேயல்ல இந்துக்களைப் புறமுதுகுகண்ட வெளிநாட்டார், அவர் களைக் கூண்டோடு அழிப்பது தேவையற்றது என எண்ணியதாலேயே இந்துச் சமூகம் தப்பிப்பிழைத்து உயிர்தரித்திருக்கிறதே அல்லாமல் சாதியால் அல்ல. வெறுமே உயிர் தரித்திருப்பதில் எந்தப் பெருமையும் இல்லை. எந்த நிலையிலே உயிர்தரித்திருக்கிறோம் என்பதே முக்கியமானது. நிபந்தனையற்ற சரணாகதி யால் உயிரைத்தக்கவைத்துக் கொள்ளலாம். கோழைத் தனமாகப் புறமுதுகுகாட்டி உயிரைத் தக்கவைத்துக் கொள்ளலாம். போராட்டத்தாலும் உயிரைத் தக்க வைத்துக் கொள்ளலாம். எந்த நிலையில் இந்துக்கள் உயிர் பிழைத்திருக்கின்றனர்? தங்கள் பகைவர்களோடு போரிட்டு, தோற்கடித்த பின்னர் இந்துக்கள் உயிர் தரித்திருக்கிறார்கள் என்று கூறப்பட முடியுமேயானால்

காந்தியார் சாதியமைப்புக்கு உரித்தாக்குகிற உயர் பண்புகளை ஒத்துக் கொள்ளலாம். இந்துக்களின் வரலாறு சரணாகதியின் வரலாறாகவே - வெட்கங் கெட்ட சரணாகதியின் வரலாறாகவே - இருந்து வரு கிறது. வரலாற்றில் மற்ற சமூகத்தினரும் தங்கள் மீது படையெடுத்தவர்களிடம் சரணடைந்திருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால், மற்ற சமூகங்களின் சரணாகதி அந்நிய ஆட்சியாளர்களுக்கு எதிரானதொரு பெருங்கிளர்ச்சியின் பின்தொடர்ச்சியாகவே இருக்கும். அந்நியப் படையெடுப்பாளர்களின் கடுந்தாக்குதலை இந்துக்கள் ஒருபோதும் தாக்குப் பிடிக்கவில்லை என்பதோடு மட்டுமல்ல; அந்நிய நுகத்தடியைத் தூக்கியெறிவதற்கான கிளர்ச்சியொன்றை உருவாக்கும் ஆற்றலையும்கூட இந்துக்கள் ஒருபோதும் வெளிப் படுத்தவில்லை. அதற்கு நேர்மாறாக இந்துக்கள் அடிமைத்தனத்தை ஆறுதலளிக்கக் கூடிய ஒன்றாக ஆக்கவே முயன்றனர். இது பற்றி நேர்மாறாகவும் அதாவது இந்துக்களின் தவிர்க்க முடியாத நிலை என்பது முற்று முழுவதுமாக சாதியமைப்பாலேயே உருவானது என்றும் எவருமே மிகச்சிறப்பாக வாதிடலாம்.

காந்தியாரின் நான்காம் பத்தியில் உள்ளவாதம் உண்மை போலத் தோன்றுகிற ஒருவாதம் ஆகும். ஆனால், தொடக்கக் கல்வியைப் பரப்புதல், பிணக்கு களை நீதி வழியில் தீர்த்தல் போன்ற செயல்பாடு களை நிறைவேற்றுவதற்கான ஒரே கருவி சாதிஎனக் கூறமுடியாது. இது போன்ற செயல்பாடுகளை நிறை வேற்றுவதற்கான மிக மோசமான கருவி அநேகமாக சாதியே. சாதியை எளிமையாக ஊழலுக்கு உட் படுத்தலாம்; சாதியின் மேல் மிக எளிதாகச் செல்வாக் கைச் செலுத்தலாம். மற்ற நாடுகள் சாதியமைப்பைக்

கொண்டிராத போதுங்கூட, அந்நாடுகளில் இச்செயல் பாடுகள் இந்தியாவில் நிறைவேற்றப்பட்டதை விட மிகச்சிறப்பாகவே நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. இராணுவப்படைகளை உருவாக்க சாதியை அடிப்படையாகக் கொள்வது என்ற எண்ணத்தைப் பொறுத்தமட்டில் அந்த எண்ணம் கோமாளித்தனமானது; சாதியமைப்பிலே தொக்கி நிற்கிற, வாழ்க்கைத் தொழில் கோட்பாட்டின்படி (Occupational Theory) எண்ணிப் பார்க்கவும் இயலாதது. தன்னுடைய சொந்த குஜராத் மாநிலத்தில் ஒரேயொரு சாதியுங்கூட இராணுவப் படையொன்றை ஒருபோதும் உருவாக்க வில்லை என்பதை காந்தியார் நன்கறிவார். இரண்டாம் உலகப்போரிலும் ஒரேயொரு சாதியுங்கூட அவ்வாறு செய்யவில்லை. முதல் உலகப் பெரும் போரின்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் (இராணுவத்திற்கு) ஆள் பிடிக்கும் முகவராகக் (recruing agent of British Imperialism) காந்தியார் குஜராத் முழுவதையும் சுற்றி வந்தபோதுங்கூட எந்த ஒரு சாதியும் அவ்வாறு இராணுவப்படைப் பிரிவாகத் தன்னை ஆக்கிக் கொள்ள வில்லை. மக்களைத் திரட்ட, சாதியமைப்பிற்கு அடிக்களனாய் இருக்கிற தொழில் வகைக் கோட்பாட்டுக்கு முடிவுகட்டுவது அவசியமாகிறது. ஆதலினாலே, தற்காப்புக்காக மக்களைப் பொதுவாகத் திரட்டுதல் என்பது உண்மையில் சாதியமைப்பின் கீழ் இயலாத ஒன்றாகவே இருந்து வருகிறது.

ஐந்து மற்றும் ஆறாம் பத்திகளிலே உள்ள வாதங்கள் எந்த அளவுக்கு எரிச்சலூட்டுகின்றனவோ அந்த அளவுக்கு முட்டாள்தனமாகவும் இருக்கின்றன. ஐந்தாம் பத்தியில் அடங்கியுள்ள வாதங்கள், வாதங்களேயல்ல. ஒரு குடும்பத்து உறுப்பினர்களுக்கு உள்ளேயே திருமணம் இல்லாதபோதுங்கூட அக்குடும்பத்தி

லுள்ள மற்றொரு உறுப்பினரிடம் ஒவ்வொரு உறுப்பினரும் பாசத்தாலும் நேசத்தாலும் நிரப்பப்பட்டுள்ள ஒரு உருவகமே குடும்பம் என்பது உண்மைதான். வைணவக் குடும்பமொன்றிலே அக்குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக உணவருந்துவதில்லை; இருந்தபோதிலுங்கூட அவர்கள் ஒருவருக்கொருவர் பாசத்தாலும் நேசத்தாலும் நிரப்பப்பெற்றவர்களாய் இருக்கிறார்கள் என்பதையும் ஒப்புக்கொள்ளலாம். இவையெல்லாம் எதை நிரூபிக்கின்றன? உடன்பிறந்தோர் ஒற்றுமையை நிலைநிறுத்திக் கொள்ள கலப்புமணமும் கலந்துண்ணலும் தேவையற்றவை என்பதை அவை நிரூபிக்கவில்லை. குடும்பப்பிணைப்பு பற்றிய விழிப்புணர்ச்சியும் உடன் பிறந்தோருக்குள் ஒற்றுமையும் பேணிவருவதற்கான, மற்ற வழிவகைகள் இருக்கையில் கலந்துண்ணலும் கலப்புமணமும் தேவையற்றவை என்பதைத்தான் அவை நிரூபிக்கின்றன. ஆனால் சாதியமைப்பிலே இல்லாதது போலவே பிணைக்கும் சக்திகள் ஏதும் அறவே இல்லாதபோது கலப்புமணமும் கலந்துண்ணலும் முழுமையாக இன்றியமையாதவை என்பதை மறுக்கவே இயலாது. சாதிக்கும் குடும்பத்துக்கும் ஒப்புவமை எதுவுமே இல்லை. குடும்பம் ஒன்றைப் பொறுத்தமட்டிலோ குடும்ப உறுப்பினர்களை ஒன்றாகப் பிணைப்பதற்கான மற்ற சக்திகள் இருக்கின்றன. அதே வேளையில் வெவ்வேறு சாதிகளை ஒன்றாகப் பிணைப்பதற்கான மற்ற வழிவகைகள் சாதி அமைப்பில் எதுவுமில்லை. எனவே கலந்துண்ணலும், கலப்புமணமும் அவசியமாகின்றன. கலந்துண்ணலுக்கும், கலப்புமணத்துக்கும் எதிரான தடையை வலியுறுத்தியவர்கள் அத்தடையை ஒப்பீட்டு மதிப்பு (relative values) பற்றிய ஒரு கேள்வியாகவே கருதி நடந்தனர். அதை முழுமையான மதிப்பு (absolute value) என்னும் கேள்வி நிலைக்கு அவர்கள் ஒருபோதும் உயர்த்தவில்லை.

காந்தியாரே அவ்வாறு செய்ய முனைந்த முதல் மனிதர். கலந்துண்ணல் தீங்கானது; அது நன்மை பயக்கும் திறனுள்ளதாய் இருந்தாலுங்கூட அதை மேற்கொள்ளக் கூடாது - ஏன்? உணவருந்துதல் ஒரு அசிங்கமான செயல்; இயற்கையின் அழைப்புக்கு விடையளித்தல்எந்தஅளவுக்குஅசிங்கமானதோஅந்தஅளவுக்கு அசிங்கமான செயலே உணவருந்துதலும். சாதியமைப்பு மற்றவர்களாலும் கூடக் காத்துவரப்பட்டிருக்கிறது. ஆனால் சாதியமைப்பைக் காப்பற்ற இத்தகைய ஒரு அதிர்ச்சி அளிக்கிற வாதம்-அதாவது அசாதாரணமான வாதம் பயன்படுத்தப்படுவதை முதல்முறையாக நான் இப்போதுதான் கேள்வியுறுகிறன். வைதீகர்களும்கூட ''எங்களைக் காந்தியாரிடமிருந்து காப்பாற்றுங்கள்'' எனக்கூறினாலும் கூறுவர். காந்தியார் எந்தஅளவுக்கு ஆழ்ந்த இந்து மனப்பாங்கு கொண்டவர் என்பதையே இது காட்டுகிறது. வைதீகர்களுள் எல்லாம் மிகமிக வைதீகமானவர்களைக்கூட காந்தியார் வென்று நிற்கிறார். அவ்வாதம் குகைவாழ் மனிதன் ஒருவனின் வாதமெனக் கூறுவதுகூடப்போதாது. உண்மையாகவே இவ்வாதம் பைத்தியம் பிடித்த ஒரு மனிதனின் வாதமே!

ஏழாம் பத்தியில் சாதியமைப்புக்கு ஆதரவாகக் கூறப்பட்டுள்ள வாதம், நன்னெறியை வலுப்படுத்துவதைப் பொறுத்தமட்டில் பெருமளவு முக்கியத்துவங் கொண்டதாக இல்லை. தன்னுடைய சாதிக்கு உரியவள் அல்லாத ஒரு பெண்ணின் மீது வேட்கையை நிறைவேற்றிக் கொள்வதில் இருந்து மனிதனை சாதி தடுக்கிறது என்பதில் ஐயமேதும் இல்லை. தன்னுடைய சாதிக்கு உரியவனல்லாத ஒருவனின் வீட்டில் சமைக்கப்பட்ட உணவுக்காகக் கையேந்தி நிற்பதில் இருந்து ஒருமனிதனை சாதி தடுக்கிறது என்பதிலும் ஐயமேதும் இல்லை. நன்னெறி என்பது உள்அர்த்தங்களையோ

கட்டுப்பாடுகளையோ பொருட்படுத்தாமல், ஒழுக்க நியதிகளை மட்டுமே கடைப்பிடிப்பதுதான் என்றால் சாதியமைப்பு ஒரு நன்னெறி அமைப்பாகக் கொள்ளப் படலாம். ஆனால் இவ்வெளிமையான கட்டுப்பாடுகள் இந்துவியல் அனுமதித்திருக்கிற பரந்த உரிமைகளை விட சமனிலையற்றுப்போய் நிற்கின்றன என்பதைக் காந்தியார் உணரவில்லை. ஏனெனில் இந்துவியல் தன்னுடைய சாதி வட்டத்துக்குள், நூறு பெண்களை மணக்கிற நூறு விலைமாதர்களை வைத்திருக்கிற ஒருவனுக்கு எந்தக் கட்டுப்பாட்டையும் விதிப்பதில்லை. தன் இச்சைகளை தன்னுடைய சாதியினரோடு, நிறைவு செய்து கொள்வதிலிருந்து அவனைச் சிறிதும் தடுப்பதில்லை.

எட்டாம் பத்தியில் சொல்லப்பட்ட வாதம் முழுவதும் கேள்விக்குரிய ஒன்று. பரம்பரை அமைப்பு நல்லதாகவும் இருக்கலாம்; நல்லது அல்லாததாகவும் இருக்கலாம்; மற்றவர்களுக்கு அது ஏற்க இயலாததாக இருக்கலாம். அப்படியிருக்க ஏன் அதிகாரபூர்வமான கோட்பாடு என்னும் நிலைக்கு அதை ஏற்றிவைக்க வேண்டும்; ஏன் அதைக் கட்டாயமாக்க வேண்டும். ஐரோப்பாவில் அது அதிகாரபூர்வமான கோட்பாடாகவும் இல்லை; கட்டாயமாகவும் இல்லை; ஐரோப்பாவில் அது ஒரு தனிமனிதனின் விருப்பத் தேர்வுக்கு விடப்படுகிறது. அங்கு பெரும்பாலோர் தம் மூதாதையரின் தொழிலையே பின்பற்றுகின்றனர். சிலர் பின்பற்றுவதில்லை. கட்டாய அமைப்பு, விரும்பியேற்கும் அமைப்பைவிடப் பயன்தரத் தக்கதென யாரால் கூற முடியும்? இந்திய மக்களின் பொருளாதார நிலையையும், ஐரோப்பிய மக்களின்பொருளாதார நிலையையும் ஒப்பிடுவோம். அது ஏதாவதொரு வகையில் வழிகாட்டியாகக் கொள்ளப்படுமேயானால், இந்த அடிப்

படையில் சாதியமைப்புக்கு ஆதரவு தருகிறவர்களாகக் காட்சி தருகிறவர்களில், பகுத்தறிவு மனங்கொண்டவர்கள் ஒருசிலரே இருப்பர். தொழிலில் அவ்வப்போது ஏற்படும் மாற்றத்தின் அடிச்சுவட்டையொட்டி, நாமோதயத்தை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்பதைப் பொறுத்தமட்டிலோ, அது (நாமோதயம்) செயற்கையான ஒன்றே. ஒரு குறிப்பிட்ட தொழிலை மேற்கொண்டு இருப்போருக்கு பட்டப்பெயர் சூட்டுவதற்கான முத்திரைகள் வேண்டும் என்கிற கற்பனைத் தேவையில் இருந்து எழுவதே அது. வர்க்க முத்திரைகள் முற்றிலும் அவசியமற்றவையாய் இருக்கலாம். சிரமம் எதையும் விளைவிக்காதபடி அவற்றை ஒரேயடியாக நல்லமுறையிலே ஒழித்துக்கட்டிவிட முடியலாம். ஆனால் இந்தியாவிலே இன்று நடப்பதென்ன? மனிதர்களின் தொழில்களும் அவர்களின் வர்க்க முத்திரைகளும் பொருந்திவரவில்லை. ஒரு பிராமணர் செருப்பு விற்கிறார் - அவர் ஒரு சாமார் (சக்கிலி) என்றழைக்கப்படுவதில்லை - ஆதலால் எவரும் அதனால் இடர்ப்படுவதில்லை. சாமார் ஒருவர் அரசு அதிகாரியாகலாம் அவர் பிராமணர் என அழைக்கப்படாததால் யாரும் நிலைகுலைந்து போகவில்லை. வாதம் முழுவதுமே தவறாகப் புரிந்து கொள்ளுதலை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சமூகத்திற்கு முக்கியமானது என்ன? தனிமனிதன் ஒருவனின் வர்க்கம் எந்த முத்திரையால் தெரிந்து கொள்ளப்படுகிறது என்பதல்ல. அவன் சமூகத்திற்குச் செய்யும் தொண்டால் தெரிந்து கொள்ளப்படுகிறது என்பதே ஆகும்.

சாதியமைப்புக்கு ஆதரவாக நான் கேள்வியுற்ற பெருந்திகைப்புக்கு உள்ளாக்கும் வாதங்களும் ஒன்று 9-ம் பத்தியிலே கூறப்படுகிறது. அக்கருத்து வரலாற்று வழியினிலே பிழையானது. மனுஸ்மிருதியைப் பற்றி

ஏதேனும் அறிந்திருக்கும் எவராலுமே, சாதியமைப்பு ஒரு இயற்கையான அமைப்பு எனக் கூறவியலாது. ஸ்மிருதி வெளிப்படுத்துவதுஎன்ன? துப்பாக்கியின் ஈட்டி முனையிலே கட்டிக்காத்து வரப்பட்ட ஒரு சட்டபூர்வ அமைப்பே சாதியமைப்பு என்பதையே ஸ்மிருதி வெளிப் படுத்துகிறது. சாதியமைப்பு நிலைத்திருப்பதற்கான காரணங்கள் என்ன? 1) ஆயுதங்களை வைத்திருப் பதில் இருந்து மக்களைத் தடுத்தல், 2) கல்விக்கான உரிமையை மக்களுக்கு மறுத்தல், 3) சொத்துடைமை என்னும் உரிமையை மக்களிடமிருந்து பறித்துக் கொள்ளுதல் ஆகியவை. சாதியமைப்பு இயற்கைக்கு எட்டாத தொலைவில் இருப்பதோடு மட்டுமல்ல; ஊழிய வர்க்கங்களின் மீது ஆளும் வர்க்கங்கள் சுமத்திய அமைப்பும் ஆகும்.

காந்தியம் ஜனநாயகத்துக்கு எதிரானது என்ற குற்றச்சாட்டு, காந்தியார் சாதியமைப்பில் இருந்து வர்ண அமைப்பிற்கு மாறிவிட்டார் என்ற நிலையால் எள்ளளவும் மாறுபடவில்லை. முதலாவதாக வர்ணம் பற்றிய கருத்தே சாதி பற்றியதைத் தோற்றுவித்தது. சாதிக்கருத்து ஒரு நாசகரமான கருத்தென்றால் வர்ணக்கருத்தின் நச்சுத் தன்மையே அதற்கு முழுமை யான காரணம். இரண்டுமே கேடான கருத்துகளே! ஒருவர் வர்ணத்தில் நம்பிக்கை கொண்டுள்ளாரா அல்லது சாதியில் நம்பிக்கை கொண்டுள்ளாரா என்பது ஒரு சிறிதும் முக்கியமானதே அல்ல. வர்ணக் கருத்தில் நம்பிக்கையற்றிருந்த புத்த மதத்தினர் அக்கருத்தை ஈவிரக்கமின்றித் தாக்கினார்கள். வைதீக அல்லது சனாதன வேத இந்துக்களால் பகுத்தறிவோடு கூடிய (Rational) எந்தவித எதிர்வாதத்தையும் முன்வைக்க முடியவில்லை. அவர்களால் சொல்ல முடிந்ததெல்லாம்

வர்ண அமைப்பு வேதங்களின் பிரமாணங்களை அடிக்களனாகக் கொண்டது; வேதங்கள் எவ்வாறு தவறற்வையோ, அவ்வாறே வர்ண அமைப்பும் தவறற்றது என்பதே! புத்தமதத்தினரின் பகுத்தறிவுக்கு எதிராக வர்ண அமைப்பைக் காக்க இந்தவாதம் போதுமானதாக இருக்கவில்லை. வர்ணக்கருத்து உயிர்தரித்திருக்கிறது என்றால் அது பகவத் கீதையினாலேயே; மனிதர்களின் தத்தமக்குரிய இயல்பான தரங்களை (Innate qualities) அடிப்படையாகக் கொண்டதே வர்ணம் என வாதிடுவதன் மூலம் வர்ண அமைப்புக்குத் தத்துவ அடிக்களனைத் தந்த பகவத் கீதையினாலேயே. வர்ணக் கருத்தைத் தாங்கி நிறுத்தவும், முட்டுக்கொடுக்கவும் சாங்கியத் தத்துவத்தை பகவத்கீதை பயன்படுத்திக் கொண்டது. இல்லையெனில் வர்ணக் கருத்து முழுக்கமுழுக்க முட்டாள்தனமான ஒன்றென்று உணரப்படுவதால் பிசுபிசுத்துப்போயிருக்கும். தத்தமக்குரிய இயல்பான தரங்கள் என்ற புதியதும், பொருத்தமானதாய்த் தோன்றுவதுமான ஒரு அடிப்படையை வர்ண அமைப்பிற்குத் தருகிறது பகவத்கீதை. அதன் மூலம் வர்ண அமைப்புக்கு புதிய உயிர்ப் பிச்சை ஒன்றைத் தருவதால் பகவத்கீதை அளவற்ற தீங்கிழைத்துவிட்டது.

பகவத்கீதையின் வர்ண அமைப்புகூட குறைந்தது இரண்டு நல்லியல்புகளைக் கொண்டுள்ளது. வர்ணம் பிறப்பை அடிப்படையாகக் கொண்டதென பகவத்கீதை கூறவில்லை. உண்மையாகவே ஒவ்வொரு மனிதனின் வர்ணமும் அவனவனுக்குரிய இயல்பான தகுதி தரங்களைப் பொறுத்து (Innate qualities) தீர்மானிக்கப்படுகிறது என்பதை பகவத்கீதை சிறப்பான அம்சமாகக் குறிப்பிடுகிறது. தகப்பனின் தொழில் (occupation) எதுவோ அதுவே மகனின் தொழிலும்

என்று அது சொல்லவில்லை. எந்தவொரு குறிப்பிட்ட மனிதனின் வாழ்க்கைத் தொழிலும் (profession) அவனது இயல்பான குணாம்சங்களைப் பொறுத்ததாக இருக்குமெனவும், அவனுடைய மகனின் வாழ்க்கைத் தொழில் மகனின் குணாம்சங்களைப் பொறுத்ததாக இருக்குமெனவும் அது கூறுகிறது. ஆனால் காந்தியாரோ வர்ண அமைப்புக்குப் புதிய விளக்கம் ஒன்றைத் தருகிறார். அவர் வர்ண அமைப்பை இனங்கண்டு கொள்ள முடியாத ஒன்றாக மாற்றிவிட்டார். பழைய வைதீகப் (Orthodox) பொருள் விளக்கத்திலே ***சாதி*** பரம்பரை வழித்தொழிலைக் குறிப்பாய் உணர்த்துகிறது; ***வர்ணம்*** அவ்வாறு செய்யவில்லை. காந்தியார் தன்னுடைய சொந்தச் சபலத்தாலே வர்ணத்திற்குப் புதிய பொருள் விளக்கம் ஒன்றைத் தருகிறார். காந்தியாரைப் பொறுத்தமட்டிலோ வர்ணம் என்பது பிறப்பால் தீர்மானிக்கப்படுவது; ஒரு வர்ணத்தின் தொழிலோ மரபு வழிக் கோட்பாட்டின்படி (Principle of heredity) தீர்மானிக்கப்படுகிறது; எனவே, வர்ணம் எனபது சாதியின் மறுபெயர் மட்டுமே. எனவே காந்தியார் சாதியிலிருந்து வர்ணத்துக்கு மாறிவிட்டார் என்பது எந்தவொரு புதிய புரட்சிகரமான கருத்தோட்டம் ஒன்றின் வளர்ச்சியை வெளிப்படுத்துவதாகாது. காந்தியாரின் பேரறிவு எப்போதுமே தொடக்கம் முதல் இறுதிவரை குறளித் (குட்டிச்சாத்தான்) தனமாகவே இருக்கிறது. தன்னுடைய குணங்களை ஒரு சிறிதும் வெளிப்படுத்தாதஒரு குறளியின் அறிவுக் கூர்மையையும் கொண்டிருக்கிறார் காந்தியார். ஒரு குறளியைப் போலவே சாதியக் கோட்பாட்டை விட்டு வெளியே வந்து வளரவும், உயரவும் காந்தியாரால் ஒருகாலும் இயலாது.

காந்தியார் சில சமயங்களில் தான் ஏதோ கொந்தளித்துக் குமுறும் ஒரு மனிதராக சமுதாயப் பொருளா

தாரப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறார். ஜன நாயகத்துக்கு ஆதரவாகவும், முதலாளித்துவத்துக்கு எதிராகவும் காந்தியாரிடம் அவ்வப்போது ஏற்படும் மன மாறாட்டங்களால் காந்தியத்தை ஆய்ந்தறிந்தவர்கள் ஏமாற்றப்பட மாட்டார்கள். ஏனெனில் காந்தியம் எந்த வகையிலும் புரட்சிகரக் கோட்பாடே அல்ல. அதுபழமை வாதத்தின் உச்ச நிலையே. இந்தியாவைப் பொறுத்த மட்டில் காந்தியம் என்பது பழமைக்குத் திரும்பும் அழைப்பைத் தன்னுடைய பதாகையிலே வெளிப்படுத்து கிற பிற்போக்குவாதக் கோட்பாடே ஆகும். காந்தியம் இந்தியாவின் பயங்கரமானதும் செத்துக் கொண்டிருப் பதுமான இறந்த காலத்தை உயிர்த்தெழச் செய் வதையும், எழுச்சியுறச் செய்வதையுமே குறிக்கோ ளாகக் கொண்டுள்ளது.

காந்தியம் என்பது ஒரு முரணியல் உண்மை யுரை. (முன்னுக்குப்பின் முரணானதாகத் தோன்றி னும் ஓர் உண்மையை அடிப்படையாகக் கொண்டது) அது அந்நிய ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறு வதை ஆதரிக்கிறது; அதாவது இந்தியாவில் நில விவரும் அரசியல் கட்டமைப்பை அழித்தொழிப்பதை ஆதரிக்கிறது. அதே வேளையில் ஒரு வர்க்கம் பிறி தொரு வர்க்கத்தின் மீது பரம்பரை அடிப்படையில் ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்கும் ஒரு சமுதாயக் கட்டமைப்பைச் சிறிதும் பாதிக்கப்படாத அளவுக்குப் பேணிவர முனைகிறது. அதாவது ஒரு வர்க்கம் பிறி தொரு வர்க்கத்தின் மீது நிரந்தரமாக ஆதிக்கம் செலுத் துவதைப் பேணிவர முனைகிறது. ஒரு முரணியல் உண்மையுரையே காந்தியம் எனக் கூறினோம். ஏன் அப்படிக் கூறினோம்? இந்துக்கள், வைதீகர்கள், (Orthodox) வைதீகர் அல்லாதோர் ஆகியோர் சுயராஜ் யத்திற்கான போராட்ட நடவடிக்கைகளை முழுமன

தோடு ஆதரிக்கும் வகையில் அவர்களை வென்றெடுப்பதற்கான காந்தியாரின் தொலைநோக்கின் ஒரு பகுதியா இந்த முரணியல் முன்னுரை? சுயராஜ்யத்துக்கான போராட்டத்துக்கு என்றால் காந்தியம் நேர்மையான ஒன்று எனக் கூற முடியுமா? அது எவ்வாறாயினும் ஆகுக. காந்தியத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன. அந்த இரண்டு அம்சங்களும் வெளிப்படையானவை. ஆனால் கெடுவாய்ப்பாக அந்த இரண்டையும் குறித்து ஒரு சிறிதும் கவனம் செலுத்தப்படவில்லை. மார்க்சியத்தைவிட காந்தியத்தை ஏற்கத்தக்கதாக அவ்விரு அம்சங்களும் ஆக்குமா என்பது பிறிதொரு கேள்வி. ஆனால் காந்தியத்தை மார்க்சியத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்ட அவை இரண்டுமே உதவுவதால் அவ்விரு அம்சங்களையும் சுட்டிக்காட்டுவது நலமாக இருக்கும்.

காந்தியத்தின் முதல் சிறப்பு அம்சம் என்ன? காந்தியத் தத்துவமானது, உடையவர்கள் தங்கள் உடைமையைத் தக்கவைத்துக்கொள்ள உதவுகிறது. இல்லாதவர்களுக்கு எதையெல்லாம் பெற உரிமை இருக்கிறதோ, அதையெல்லாம் அவர்கள் பெறாமல் தடுப்பதற்குத் துணைபோகிறது. வேலை நிறுத்தங்கள் பற்றிய காந்தியாரின் மனப்பாங்கு, சாதிபற்றிய காந்தியாரின் பயபக்தி, ஏழைகளின் நலனுக்கென செல்வந்தர்களால் ஏற்படுத்தப்படக் கூடிய தர்மகர்த்தா ஸ்தாபனம் என்னும் காந்தியக் கோட்பாடு ஆகியவற்றை ஆய்கிற எவராலுமே மேற்கூறிய முதலம்சம் காந்தியத்தின் சாரம் என்பதை மறுக்க முடியாது. அது தற்செயலாக நேர்ந்த ஒன்றா என்பது விவாதத்திற்கு உட்பட்டதாகலாம். ஆனால் காந்தியம் என்பது பெரும்பணக்காரர்கள் மற்றும் உல்லாசவர்க்கத்தின் தத்துவமே என்ற உண்மை தொடர்ந்து நின்று நிலைத்திருக்கும்.

காந்தியத்தின் இரண்டாவது சிறப்பம்சம் என்ன? நல்வாய்ப்புகளிலேயே மிகமிக நல்லவையென கெடு வாய்ப்புகளையே மக்களுக்கு அறிமுகப்படுத்துவது என்பதே அது. அதன் மூலம் மக்கள் அக்கெடுவாய்ப்பு களை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் ஏய்ப்பது; இந்தக் கூற்றின் உண்மையை வெளிப்படுத்த இரண்டொரு எடுத்துக்காட்டுகளே போதுமானவை.

சூத்திரர்கள் (இந்துக்களில் நான்காம் பிரிவினர்) சொத்தை அடைவதை இந்துப் புனிதச் சட்டம் தண்ட னைக்கு உரியதாக்கியது. உலகத்தின் எந்தப் பகுதியும் அறிந்திராத வறுமையை வலிந்து திணிக்கிற ஒரு சட்ட மிது. காந்தியம் என்ன செய்கிறது? அது அந்தத் தடையை அகற்றவில்லை. சொத்தை விட்டொழித்து நிற்பதற்கான சூத்திரனுடைய மனவலிமைக்காக அவனை வாழ்த்துகிறது.

காந்தியாரின் சொந்தச் சொற்களையே மேற் கோள் காட்டுவது மிகச் சிறப்பானது. •

"ஒரு மதவியல் கடமையாகத் தொண்டூழியம் மட்டுமே (உயர் சாதியினருக்கு) செய்கிற, சொத்தை சொந்தமாக்கிக் கொள்ள விரும்பாத, சொத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் விருப்பமுங்கூட இல்லாத சூத்திரன் ஆயிரம் வந்தனங்களுக்கு உரியவன். கடவு ளருங்கூட அவன் மேல் பூமழை பொழிவர்."

---

• வர்ண வயவஸ்தா பக்கம். 51.

என் கூற்றுக்கு ஆதரவாக அமைகிற மற்றொரு எடுத்துக்காட்டு, தோட்டியைப் பற்றிய காந்தியத்தின் மனப்பாங்காகும். இந்துக்களின் புனிதச்சட்டம் திட்டவட்டமாகக் கூறுகிறது: தோட்டியின் பிற்சந்ததியாரும் தோட்டி வேலை செய்தே உயிர் வாழவேண்டும். இந்தியலில் தோட்டி வேலை என்பது விரும்பித் தேர்ந்தெடுத்துச்செய்யக்கூடிய ஒன்றாக இருந்ததில்லை. பலவந்தப்படுத்துதல் மூலம் செய்யப்படும் ஒன்றாகவே இருந்தது. காந்தியம் என்ன செய்கிறது? தோட்டித் தொழிலை சமூகத்திற்குச் செய்யக்கூடிய தொண்டுகளிலேயே பெரும்பெருமை வாய்ந்த தொண்டு எனப் புகழ்வதன் மூலம் இந்த அமைப்பை என்றும் அழியாததாய் நிலைநிறுத்த முனைகிறது; தீண்டத்தகாதோர் மாநாட்டில் அதன் தலைமை உரையில் காந்தியார் கூறுவதைக் காண்போம் :

''நான் மோட்சம் அடைய விரும்பவில்லை. நான் மறுபிறவி எடுக்க விரும்பவில்லை. ஆனால் நான் மறுபிறவி எடுத்தாக வேண்டுமென்றால் என்னையும் தீண்டத்தகாதவர்களையும் பரிதாபத்திற்குரிய நிலையிலிருந்து விடுவித்துக்கொள்ளப் பெருமுயற்சி செய்யும் பொருட்டு அவர்களின் துன்பங்களிலும் துயரங்களிலும் பங்குகொள்ள அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிற வெளிப்படையான மானக்கேட்டிலும் பங்குகொள்ள நானொரு தீண்டத்தகாதவனாகவே பிறக்க வேண்டும். எனவே நான் இறைவனை இறைஞ்சினேன். நான் மீண்டும் பிறந்தாக வேண்டுமென்றால் நானொரு பிராமணனாகவோ, சத்திரியனாகவோ, வைசியனாகவோ அல்லது சூத்திரனாகவோ பிறக்கக் கூடாது. ஓர் ஆதி சூத்திரனாகவே பிறக்கவேண்டும்''.

---

• யங் இந்தியா ஏப்ரல் 27, 1921.

"நான் தோட்டித் தொழிலை நேசிக்கிறேன். என் ஆசிரமத்தில் பதினெட்டு வயதுப் பிராமணச் சிறுவனொருவன், ஆசிரமத் தோட்டிக்குத் தூய்மையைக் கற்றுத் தரும்பொருட்டு தோட்டியின் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார். அச்சிறுவன் ஒரு சீர்திருத்தவாதியல்ல. அவன் வைதீகத்திலே பிறந்தவன்; வைதீக முறையிலேயே வளர்க்கப்பட்டவன். ஆனால் தானும் ஒரு தேர்ந்த தோட்டியாக ஆகாதவரை தன்னுடைய ஆற்றல் குறைபாடு உடையதாகவே இருக்குமென்றும், ஆசிரமத் தோட்டி அவனுடைய வேலையை நல்லமுறையில் செய்ய வேண்டுமென தான் விரும்பினால், தானே அதை நல்லமுறையில் செய்து ஓர் எடுத்துக்காட்டாக அமைய வேண்டுமெனவும் அச்சிறுவன் எண்ணினான்"

"நீங்கள் இந்துச் சமூகத்தைத்தூய்மைப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை உணரவேண்டும்"

ஒரு வர்க்கத்தால் மற்றொரு வர்க்கத்தின்மீது மனமறிந்து வேண்டுமென்றே சுமத்தப்பட்ட கொடுமைகளை நிறுத்துவதற்கான காந்தியத்தின் இந்த முயற்சியைவிட பொய்யான பிரச்சாரத்துக்கு மோசமான எடுத்துக்காட்டு எதுவும் இருக்க முடியுமா? காந்தியம் வறுமை விதியின் பெருமையை சூத்திரர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்குமே பொருந்தியதாக போற்றிப் புகழ்ந்திருந்தது எனக் கொள்வோம். அந்நிலையில் காநதியந்தைப் பற்றி மிகமிக மோசமாகச் சொல்லக் கூடியதெல்லாம் காந்தியம் ஒரு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட கருத்து என்பதே. ஆனால் வறுமை விதியை ஒரு வர்க்கத்தாருக்கு மட்டுமே பெருமைதரும் நல்லவிதி என்று ஏன் புகழவேண்டும்? பகுத்தறிவின் அடிப்படையில் தனக்கெதிரான கொடுமையான தீர்ப்

யென எதைக் குறித்து ஒருவன் கடுங்கோபம் கொள்வானோ, அதையே அவன் தன்னிச்சையாகவே முன் வந்து ஏற்றுக் கொள்ளும்படி செய்ய தற்பெருமை, கர்வம் முதலான மனித இழிகுணங்களிடம் மன்றாடி நிற்பதேன்? இந்து சாத்திரங்கள், இந்துக் கருத்து இவற்றைப் பொறுத்தமட்டில் பிராமணன் ஒருவன் தோட்டி வேலை செய்த போதிலுங்கூட, பிறப்பிலே தோட்டியான ஒருவனுக்குரிய தடைகளுக்கு அப்பிராமணன் ஒருபோதும் இரையாக்கப்படமாட்டான் என்பது தெளிவாகத் தெரிகிற போதுங்கூட, பிராமணனே தோட்டிவேலை செய்ய ஆயத்தமாய் இருக்கிறான் என்று சொல்வதன் பயனென்ன?ஏனெனில் இந்தியாவில் எந்த மனிதனும் வேலையின் காரணமாகத் தோட்டியாக இல்லை. ஒருவன் தோட்டி வேலைசெய்கிறானா இல்லையா என்ற கேள்வியே பொருட்படுத்தப்படாத அளவிலே, அவன் பிறப்பின் காரணமாகவே தோட்டியாகிறான். தோட்டிவேலை செய்ய மறுக்கிறவர்களை அவ்வேலையைச் செய்யத்தூண்டுவதை நோக்கமாகக் கொண்டு, ''தோட்டிவேலை உயர்ந்ததொரு வாழ்க்கைத் தொழில்'' என்று காந்தியம்போற்றிப் புகழ்ந்திருந்தால் அதை நம்மால் புரிந்துகொள்ளமுடியும். ஆனால், தோட்டியை, தோட்டியைமட்டுமே, தோட்டி வேலையைத் தொடர்ந்து செய்யும்படியாக • ''தோட்டி வேலை உயர்ந்ததொரு வாழ்க்கைத் தொழில்; அதுபற்றி அவன் வெட்கங்கொள்ளத் தேவையில்லை'' எனக்கூறி தோட்டியின் தற்பெருமைக்கும், கர்வத்துக்கும் அழைப்பு

• இந்திய மாநிலங்களில் (Provinces) ஒரு தோட்டி, தோட்டிவேலை செய்ய மறுத்தால் அது குற்றமாக்கப்பட்டு ஒருகுற்றவியல் நீதிமன்றத்தில் தண்டனைக்கு உள்ளாக்கப்பட முடியும்.

விடுத்து மன்றாடி நிற்பதேன்? அவர்களுடைய இந்த இழிகுணங்களுக்கு அழைப்பு விடுத்து அவற்றின்முன் மன்றாடி நிற்பதன் மூலம் வறுமை சூத்திரர்களுக்கு நல்லது; மற்ற எவருக்குமேயல்ல; தோட்டிவேலை தீண்டத்தகாதவர்களுக்கு நல்லது. மற்ற எவருக்குமேயல்ல எனப் போற்றிப் புகழ்பாடுவதும், இக்கடுஞ்சுமைகளை வாழ்க்கையின் தன்னிச்சையானநோக்கங்களென அவர்களை ஒத்துக்கொள்ளச் செய்வதும், ஆதரவற்ற வர்க்கங்களை அவமரியாதைக்கும், ஈவிரக்கமற்ற கேலிப் பேச்சுக்கும் உள்ளாக்குவதாகும். இவற்றைக் காந்தியால் மட்டுமே மனநிறைவோடும், தீமைபற்றிய அச்சமின்றியும் நிலை நிறுத்தமுடியும்.

ஏறத்தாழ காந்தியம் போன்ற மற்றொரு ''இசத்தை'' மறுப்பவராக வால்டேர் கூறிய சொற்கள் நினைவுக்கு வருகின்றன. ''ஓ! ஒரு சிலரின் துன்பம் மற்றவர்களுக்கு இன்பத்தைக் கொண்டு வருகிறது. சமூக முழுமைக்குமே நல்ல முறையில் பணியாற்றுகிறது என மக்களுக்குக் கூறுவது இகழ்ச்சியானதன்றோ! இறந்து கொண்டிருக்கும் மனிதன் ஒருவனுக்கு, அழிந்து கொண்டிருக்கும் தன்னுடைய உடம்பிலிருந்து ஆயிரம் புழுக்கள் வாழ்வு பெறுமென்பதை அறிந்து கொள்வது எவ்வளவு ஆறுதல்! ''

விமர்சனம் ஒரு புறமிருக்கட்டும். பாதிக்கப்பட்டவனுக்கே, தனக்கிழைக்கப்பட்ட அநீதிகளைத் தன்னுடைய சிறப்புரிமைகளாகத் தோன்றச்செய்வது காந்தியத்திற்குக் கைவந்த கலையாகும். மக்களைத் தவறான நம்பிக்கைகள், தவறானபாதுகாப்புகள் ஆகியதொட்டில்களிலே இட்டுத் தாலாட்ட முழுமையாக மதத்தை ''அபின்'' (போதைப் பொருள்) ஆகப் பயன்படுத்திக் கொண்ட ''இசம்'' ஏதாவது இருக்குமேயானால் அது

காந்தியமே. ஷேக்ஸ்பியரின் வழியிலே எவருமே நன்றாகவே நவிலலாம். ''வாய்மை என்ற பெயரில் வந்துதித்த கயமையே! சூழ்ச்சியே!! உன் பெயரே காந்தியம்''.

இதுதான் காந்தியம்! காந்தியத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு விட்ட பின்னாலே காந்தியம் 'இந்த நாட்டின் சட்டமானால், அச்சட்டத்தின் கீழ் தீண்டத் தகாதவர்களின் கதி என்ன? என்ற கேள்விக்குப் பதிலளிக்க மூளையை அதிகமாகக் கசக்கிக் கொள்ள வேண்டியதில்லை. அடிமட்டத்து இந்துக்களின் கதியோடு அதை எப்படி ஒப்பிட முடியும்? காந்தியச் சமுதாய ஆணை நடைமுறைக்கு வருமேயானால் அவனுடைய கதி என்னவாக இருக்குமெனக் காட்ட ஏராளமாகச் சொல்லப்பட்டு விட்டன. அடிமட்டத்து இந்துக்களும் தீண்டத்தகாதவர்களும் உரிமையிழந்த ஒரே வர்க்கத்தினராக உள்ளவரையிலே, தீண்டத்தகாதவனின் கதி முன்னிலும் நல்லதாக இருக்காது. ஏதாவது நடக்கக் கூடும் என்றால் மிக எளிதாக இதனிலும் மோசமான ஒன்றாகவே இருக்கும். இந்தியாவிலே சாதி இந்துக்களில் மிகக் கீழ்த்தட்டில் உள்ளவன் கூட-ஏன்-பழங்குடி மற்றும் மலைவாழ் இன மனிதனுங்கூட தீண்டத் தகாதவர்களைவிடக் கலவியிலும் பொருளாதாரத்திலும் அவ்வளவாக மேன்மையாக இல்லாதிருந்தபோதும், தீண்டத்தகாதவர்களை விட மேன்மையானவனாக இருக்கிறான். தீண்டத்தகாதோரைவிட மேன்மையானவனாக அவன் தன்னைத்தானே குறிப்பிட்டுக் கொள்கிறான் என்பதல்ல. இந்துச் சமூகம் தீண்டத்தகாதோர் மீது அவன் ஆளுமை கொண்டாடுகிற மேன்மையை ஒத்துக்கொள்கிறது. எனவே தீண்டத்தகாதவன் இப்போது ஆளாகியிருப்பது போலவே மிகமிக மோசமான விதிக்கு (fate) ஆளாகி நிற்பான். அதாவது சுகத்திலே

கடைசிப்பங்கு அவனுக்கு; அடக்குமுறையில் முதலில் சுட்டெரிக்கப்படுவது அவனே.

இந்த விதியிலிருந்து தீண்டத்தகாதோரை மீட்க காந்தியம் என்ன செய்கிறது? தீண்டாமையை ஒழிப்பதுபோலக் காந்தியம் பாசாங்கு செய்கிறது. காந்தியத்தின் மிகச் சீரிய பண்பாக அதுவே வாழ்த்தி வரவேற்கப்படுகிறது. ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இச்சீரிய பண்பின் பயனென்ன? காந்தியத்தின் மிகப் பெரிய அம்சமாகச் சொல்லப்படுகிற இந்தத் தீண்டாமை எதிர்ப்பின் யோக்கியதையை நடைமுறை செயல் திட்டத்தில் வைத்து மதிப்பிடுவது அவசியமாகிறது. தீண்டத்தகாதவர்களைத் தொடுவதை இந்துக்கள் பொருட்படுத்தமாட்டார்கள் என்பதிலும் மேலாக, அது எதையாவது குறிப்பிடுகிறதா? தீண்டத்தகாதோருக்கு விதிக்கப்பட்டுள்ள கல்வி பெறும் உரிமை மீதான தடை அகற்றப்படுவதைக் குறிப்பிடுகிறதா? இந்த இரு கேள்விகளையும்தனித்தனியாகக் கையாளுவதுநல்லது.

முதற்கேள்வியிலிருந்து தொடங்குவோம் தீண்டத்தகாதவரைத் தொட்டபின்னர் ஓர் இந்து குளிக்கக் கூடாதெனக் காந்தியார் கூறவில்லை. அவ்வாறு தீட்டையகற்றிப் புனிதப்படுத்திக் கொள்வதற்காகக் குளிப்பதை காந்தியார் மறுத்துப் பேசவில்லை என்றால் தீண்டத்தகாதவர்களைத்தொடுவதன்மூலம் தீண்டாமை எப்படி அற்றுப்போகும் என்பதைப் புரிந்துகொள்வது கடினமே. தொடுவதன் மூலம் தீட்டாவது (Pollution) தீட்டையகற்றக் குளிப்பதன் மூலம் புனிதமாவது (Purification) என்னும் கருத்தையே தீண்டாமை மையமாகக் கொண்டு சுழலுகிறது. காந்தியம், தீண்டத்தகாதவர்கள் சமுதாயவகையில்இந்துக்களோடு சரிநிகர் சமானமாவதைக் குறிக்கிறதா? தீண்டாமை

அகற்றுவது என்றால் இந்துக்களுக்கும் தீண்டத்தகா தவர்களுக்கும் இடையிலான கலந்துண்ணலோ கலப்பு மணமோ அல்ல என்று காந்தியார் மிகமிகத் திட்ட வட்டமாகக் கூறிநிற்கிறார். காந்தியாருடைய தீண் டாமை எதிர்ப்பின் பொருள் என்ன? தீண்டத்தகாத வர்கள் ஆதி சூத்திரர்கள் என்னும் வர்க்கமாக வகைப் படுத்தப்படமாட்டார்கள். அதற்குப் பதிலாக சூத்திரர் கள் என்னும் வர்க்கமாக வகைப்படுத்தப்படுவார்கள் என்பதே!• இதைவிட அதிகமாக காந்தியத்தில் எதுவுமே இல்லை. பழைய சூத்திரர்கள் புது சூத்திரர் களைத் தங்கள் பட்டிக்குள் அடைத்துக் கொள்ள ஒப்புக்கொள்வார்களா என்ற கேள்வியை காந்தியார் எண்ணிப்பார்க்கவே இல்லை. அதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லையானால் தீண்டாமையை அகற்றுவது அறிவற்ற ஓர் ஆய்வுத் திட்டமே ஆகும். ஏனெனில் அந்நிலையில் இத்திட்டம் தீண்டத்தகாதோரை இனியுமொரு தனியினமாகவே வைத்திருக்கும். தீண்டா மையை அழிப்பது, சூத்திரர்கள் தீண்டத்தகாதோரை சரிநிகர் சமானமானவர்களாக ஏற்றுக் கொள்வதை ஏற்படுத்தாது என்பதை காந்தியார் அநேகமாக அறிந்திருக்கிறார் போலும். காந்தியார் புதியதும் வித்தியாசமானதுமான ஒரு பெயரைத் தீண்டத்தகா தோருக்குத் தந்திருப்பதற்கான காரணமும் அதுவே எனத் தோன்றுகிறது. எது உண்மையான நடப்பாக ஆகப்போகிறதோ அதை ஒரு புதிய பெயரில் அழைக் கிறது. தீண்டத்தகாதோரை ஹரிஜனங்கள் என்று அழைப்பதன் வாயிலாக காந்தியார் ஒரே கல்லில் இரண்டு பறவைகளை வீழ்த்திவிட்டார். சூத்திரர்கள் தீண்டத்தகாதவர்களை தங்களுக்கு சரிநிகர் சமான மாக ஒப்புக் கொள்வது சாத்தியமானதல்ல என்பதை

---

• யங் இந்தியா பிப்ரவரி 5, 1925.

வெளிப்படுத்துகிறார். தான் புதிதாகச் சூட்டிய பெயர் மூலம் சரிநிகராக்குவதற்கு எதிராகச்செயலாற்றுகிறார்; சரிநிகராக்குவதை இயலாத ஒன்றாகவும் ஆக்கி விட்டார்.

இரண்டாவது கேள்வி பற்றி :

தீண்டத்தகாதோரின் கல்வியுரிமைக்கும், அறிவு பெறவும் கலைபயில்வும் ஆன அனுமதிக்கும் இந்து சாத்திரம் விதித்திருந்த தடையை விலக்கிக்கொள்ள காந்தியம் ஆயத்தமாக இருக்கிறது என்பது உண்மையே. காந்தியத்தின் கீழ் தீண்டத்தகாதோர் சட்டம் படிக்கலாம்; மருத்துவம் படிக்கலாம்; பொறியியல் படிக்கலாம்; தாங்கள் எண்ணி விரும்புகிற எதை வேண்டுமானாலும் படிக்கலாம். அந்தவரைக்கும் எவ்வளவோ நல்லதே! ஆனால், தங்கள் அறிவையும் பயிற்சியையும் பயன்படுத்திக் கொள்ள தீண்டத்தகாதோர் தடைப்படுத்தப்படாது இருப்பார்களா? தங்கள் வாழ்க்கைத் தொழிலைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்று இருப்பார்களா? சட்ட நிபுணர், பொறியாளர், மருத்துவர் என்பன போன்ற பொருளீட்டும் தொழிலை அவர்கள் மேற்கொள்ள முடியுமா? இக்கேள்விகளுக் கெல்லாம் காந்தியம் தருகிற அழுத்தமான பதில் : இல்லை'' என்பதே. தீண்டத்தகாதோர் தங்கள் பரம்பரை வழியிலான வாழ்க்கைத் தொழிலையே (heredity profession) பின்பற்றியாக வேண்டும். அத் தொழில்கள் தூய்மையற்றவை என்பது ஒரு நியாய மாகாது. பரம்பரை வழியில் தொழில் என்று ஆவதற்கு முன்னால் தொழில் கட்டாயப்படுத்துதலின் பின் விளைவாக இருந்ததே அல்லாமல் விரும்பி ஏற்றுக் கொண்டதன் விளைவல்ல என்பது ஒரு பொருட்டே யல்ல. காந்தியத்தின் வாதம்தான் என்ன? ஒருமுறை,

ஒரு செய்தி குறித்து முடிவு கட்டிவிட்டால் தவறாகவே முடிவு கட்டப்பட்டிருந்தாலும், எப்போதைக்குமே முடிவு கட்டியதாகிறது என்பதே! காந்தியத்தின் கீழ் தாழ்த்தப்பட்டவர்கள நிரந்தரமாகத் தோட்டிகளாகவே இருக்க வேண்டும். தீண்டத்தகாதோர் தீண்டாமையாகிய வைதீக அமைப்பையே பெரிதும் விரும்பி நிற்பார்கள் என்பதில் ஐயமே இல்லை. சுமத்தப்பட்டிருக்கிற ஒரு கட்டாயமான அறியாமையே தோட்டித் தொழிலை சகித்துக் கொள்ளக் கூடியதாக ஆக்குகிறது. ஆனால் படித்தவனான ஒரு தீண்டத்தகாதவனை தோட்டித் தொழில் செய்யுமாறு வற்புறுத்துகிற காந்தியம் அடுத்தவர் துன்பத்தில் இன்பங்கொள்ளும் குணத்திற்கு எவ்விதத்திலும் குறைந்ததே அல்ல.

காந்தியத்தின் கருணை - சாபக்கேடு ஒன்றின் மிகப்பொல்லாத வடிவம். காந்தியத்திலுள்ள தீண்டாமை எதிர்ப்பு என்னும் சிறப்பியல்போ முற்றிலும் பொய்யான ஒரு தோற்றமே! அதில் வேறேதும் இல்லை.

தீண்டத்தகாதோர் தங்களுக்கு இறுதியானதொரு ஈடேற்றத்திற்கு வழிவகுக்கக் கூடிய ஒன்றாக ஒப்புக் கொள்ள காந்தியத்தில் வேறு என்னதான் இருக்கிறது? தீண்டாமைக்கு எதிரான மாயத்தோற்றங் கொண்ட இந்த பிரச்சாரங்களைத் தவிர்த்து நோக்கினால் காந்தியம் என்பது சனாதன கோட்பாட்டின் மற்றொரு வடிவமே. சனாதனயிசமோ, போர்க்குணமிக்க வைதீக இந்துயிசத்தின் (Hinduism) மிகத் தொன்மையான பெயரே. வைதீக இந்துயிசத்திலே காணப்படாத எந்த அம்சம் காந்தியத்திலே இருக்கிறது? இந்துயிசத்தில் சாதி இருக்கிறது; காந்தியத்திலும் சாதி இருக்கிறது. இந்துயிசம் பரம்பரை வழியிலான வாழ்க்கைத் தொழில் சட்டத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது; காந்தியமும்

அவ்வாறே. இந்துயிசம் கோபூஜையைப் (பசுவழிபாடு) போற்றிப் புகழ்பாடுகிறது; காந்தியமும் அவ்வாறே. இவ்வுலகத்தில் மனிதனின் நிலைமையான ஊழ்வினை என்னும் கர்மச்சட்டத்தை (Law of Karma) இந்துயிசம் உயர்த்திப்பிடிக்கிறது; காந்தியமும் அவ்வாறே. இந்துயிசம் சாஸ்திரங்களின் அதிகாரத்தை ஒப்புக் கொள்கிறது; காந்தியமும் அவ்வாறே. இந்துயிசம் அவதாரங்களை அல்லது கடவுள் மனித உருவம் எடுத்தலை நம்புகிறது. காந்தியமும் அவ்வாறே. இந்துயிசம் விக்கிரகங்களை நம்புகிறது; காந்தியமும் அவ்வாறே.•

காந்தியம் செய்ததெல்லாம் என்ன? இந்துயிசத்திற்கும் இந்துயிசத்தின் வறட்டுச் சூத்திரங்களுக்கும் ஒருதத்துவ வழியிலான நியாயப்படுத்தல் ஒன்றைக் காண முற்பட்டதே! இந்துயிசம் என்பது மொட்டையான விதிகளின் ஒரு தொகுப்பே; இவ்விதிகளோ கரடுமுரடானதும் கொடூரமானதுமான ஓர் அமைப்பின் தோற்றத்தைத் தங்கள் முகத்திலே தாங்கியவை. இவ்வமைப்பிற்கு வினயமானதும் கண்ணியத்துக்குரியதுமான ஒரு தோற்றத்தை காந்தியம் தருகிறது; அழகுபடுத்துகிறது. எதற்காக? கவரத்தக்கதாக அலங்கரிக்கவே! இந்துயிசத்தின் நிர்வாணத்தை மூடிமறைக்கவே. காந்தியம் எந்தத் தத்துவத்தை முன்வைக்கிறது? அத்தத்துவத்தை இரத்தினச் சுருக்கமாக இவ்வாறு கூறிவிடலாம். ''இந்துயிசத்தில் இருக்கிற எல்லாமே நல்லதே! இந்துயிசத்தில் இருக்கிற எல்லாமே பொதுமக்கள் நன்மைக்குத் தேவையானதே' என்பதே. வால்டேரின்' 'Candide' -ஐ நன்கறிந்தோர் மாஸ்டர் பாங்கி லோஸின் தத்துவ

---

• யங் இந்தியா, அக்டோபர் 6, 1921 இதழில் காந்தியாரின் கட்டுரைகளில் தன் நம்பிக்கைகள் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்.

மே அது என்பதை உணர்வர். அது பற்றி வால்டேர் எவ்விதம் எள்ளிநகையாடினார் என்பதை நினைவு கூர்வர். இந்துக்கள் காந்தியத்தால் மகிழ்ச்சியடைகிறார்கள் என்பது உண்மையே. காந்தியம் அவர்களுக்குப் பொருந்துகிறது, அவர்களுடைய நலன்களுக்கு உகந்ததாய் இருக்கிறது. பேராசிரியர் இராதாகிருஷ்ணன் நேர்மையான உணர்வாலோ-அல்லது போற்றிப் புகழ்பாடுவதால் அண்டிப்பிழைக்கவோ- எதற்காக ஆயினும் சரி நாம் ஆராய முற்பட்டு நிற்கவேண்டாம்-காந்தியாரை 'மண்ணில் வந்த கடவுள்' என்று விவரிக்கும் எல்லைக்கே சென்றுவிடுகிறார். தீண்டத்தகாதோர் இதிலிருந்து புரிந்து கொள்ள வேண்டியது என்ன? ''காந்தியம் என்னும் பெயருடைய இக்கடவுள் வருத்தப்படுத்தப்பட்ட ஒரு சந்ததியை மனங்குளிரச்செய்ய வந்திருக்கிறார். அவர் இந்தியாவைப் பார்த்தார்; எல்லாமே நன்றாகவே இருக்கிறது. இந்துக்கள் சாதிச்சட்டத்தை மட்டும் நிறைவேற்றுவார்களேயானால் நன்றாகவே இருக்கும் எனக் கூறாமல் அவர் இந்தியாவை மாற்றினார். அவர் வருத்தப்படுத்தப்பட்ட சந்ததியை நோக்கிக் கூறினார். ''நான் சாதிச் சட்டத்தை நிறைவேற்ற வந்திருக்கிறேன். அதிலிருந்து ஒரு தலைப்பையோ கடுகளவையோ நீக்க நான் அனுமதிக்க மாட்டேன்''

காந்தியம் தீண்டத்தகாதோருக்கு என்ன நம்பிக்கையைத் தரமுடியும்? தீண்டத்தகாதோருக்கு இந்துயிசம் பேரச்சங்களின் பாசறை. வேதங்களின் புனிதம் மற்றும் தவறிலாத்தன்மை ஸ்மிருதிகள் மற்றும் சாஸ்திரங்கள், சாதியின் இரும்புச்சட்டம், கர்மாவின் இதயமில்லாச் சட்டம், பிறப்பால் அமையும் சமூக அந்தஸ்தின் அறிவற்ற சட்டம் ஆகியவை இந்துயிசம் தீண்டத்

தகாதோருக்கு எதிராக வடிவமைத்துள்ள உண்மை யான சித்திரவதைக் கருவிகளே, காந்தியத்தின் நெஞ்ச அந்தரங்கத்தில் தீண்டத்தகாதோரின் வாழ்க்கையை உருக்குலைத்த தகர்த்த, முளையிலே கிள்ளிஎறிந்த இந்தக் கருவிகள் எக்கேடுமின்றி, நிறம்கூடக்குன்றாமல் இருப்பதைக் காணலாம். இந்துயிசம் பேரச்சங்களின் பாசறையாக இருந்துவருவதைப் போலல்லாமல் காந்தியம் சொர்க்கமாக இருக்கிறது என்று தீண்டத்தகாதோரால் எப்படிச் சொல்லமுடியும். தீண்டத்தகாதோரிடம் காந்தியம் பற்றிய ஒரே எதிர்வினை - இயற்கையான எதிர்வினை - காந்தியத்தைக் கண்டாலே ஓடிவிடுவது ஆகும்.

காந்தியவாதிகள் கூறலாம். நான் கூறியது பழைய காந்தியத்திற்கும் பொருந்துவது; சாதியில்லாத காந்தியம் என்னும் புது காந்தியம் ஒன்று இருக்கிறது என்று. இக்கூற்று, சாதி காலத்துக்கு ஒவ்வாத ஒன்று என்னும் காந்தியாரின் அண்மைக்காலத்திய அறிக்கையைக்• குறிப்பாகக் கொண்டது. காந்தியாரின் இந்த அறிக்கையால் சீர்திருத்தவாதிகள் இயற்கையாகவே மகிழ்விக்கப்பட்டார்கள். கடைந்தெடுத்த சமுதாயப் பிற்போக்குவாதியாகத் தன் விஷமமான பங்கை ஆற்றிய பிறகு, சாதியமைப்பை ஆதரிக்கப் பெரும்பாடு படுபவர் என்னும் தனிச்சிறப்பு பெற்றபிறகு, நியாயத்திற்கும் அநியாயத்திற்குமிடையே வேறுபாடு காட்டாத வாதங்களால் சிந்தனையற்ற இந்துக்களை முட்டாளாக்கி வஞ்சித்துநின்று இந்துக்களின்மேல் பயங்கரமான செல்வாக்கைக் கொண்டுநின்ற காந்தியார் தாம் சொல்லியது எல்லாமே தவறெனக் கைவிடுதலைக் கண்டு எவரால் மகிழ்ச்சியடையாமல் இருக்கமுடியும்?

---

• இந்துஸ்தான் டைம்ஸ், ஏப்ரல் 15. 1945.

ஆனால் உண்மையாகவே மகிழ்ச்சியாகக் கொண்டா டப்படுவதற்கான ஒரு செய்தியா இது? காந்தியத்தின் இயல்பை அவ்வறிக்கை மாற்றியிருக்கிறதா? ஒரு புதிய இசமாக முன்பிருந்ததைவிட நல்ல ''இசமாக'' காந்தி யத்தை அவ்வறிக்கை ஆக்கியிருக்கிறதா? முன்னர் கூறியதைப் பிழையென ஒத்துக்கொள்வதுபோல் பேசும் காந்தியாரின் வாதத்தால். மெய்சிலிர்த்துப் போகிற வர்கள் இரண்டு விஷயங்களை மறந்து விடுகிறார்கள். முதலாவதாக, சாதி காலத்துக்கு ஒவ்வாதது என்றே காந்தியார் கூறியிருக்கிறார்; அது ஒரு தீங்கு என அவர் கூறவில்லை; அது ஒரு சாபக்கேடு என அவர் கூற வில்லை; காந்தியார் சாதிக்கு ஆதரவாக இல்லை எனக் கொள்ளவும் செய்யலாம். ஆனால் தான் வர்ண அமைப் புக்கு எதிராக இருப்பதாக காந்தியார் கூறவில்லை. காந்தியாரின் வர்ண அமைப்பு என்பதென்ன? சாதி யமைப்பிற்கு ஒரு புதுப்பெயரேயன்றி வேறல்ல. மேலும் காந்தியாரின் வர்ண அமைப்புக் கொள்கை சாதியமைப் பின் மிக இழிவான எல்லா அம்சங்களையும் தன்னகத் தே தக்கவைத்துக் கொண்டுள்ளது.

காந்தியாரின் அவ்வறிக்கைக்குக் காந்தியத்தில் ஏற்பட்டிருக்கிற அடிப்படையான சிறிய மாற்றமெனப் பொருள் கொள்ள முடியாது தீண்டத்தகாதோருக்கு காந்தியத்தை ஒப்புக் கொள்ளத்தக்கதாக ஆக்க அவ் வறிக்கையால் இயலாது. இன்னமுங்கூட தீண்டத்தகா தோருக்கு பின்வருமாறு சொல்வதற்கான அடிப்படை அப்படியே இருக்கிறது;

''அடக்கடவுளே! காந்தி என்கிற இந்த மனி தரா நம் இரட்சகா?''

■ ■ ■

---

● இந்துஸ்தான் டைம்ஸ். எப்ரல் 15, 1945.

இக்கட்டுரை,

# காங்கிரசும் காந்தியாரும் தீண்டத்தகாதோருக்குச் செய்ததென்ன?

என்னும்

டாக்டர். அம்பேத்கரின் நூலிலிருந்து

"**காந்தியம்**" என்னும்

அத்தியாயத்தின் மறுபதிப்பு.

(1945- ல் வெளியானது.)

## கார்டுகில் வெளியீடுகள்

1 இந்திய மாதா

—காதரைன் மேயோ

2 இந்தியாவில் சாதிகள்

—டாக்டர் B.R. அம்பேத்கர்

3 காலனியாதிக்கத்திற்குப் பிந்திய சமுதாயங்களில் அரசு

—அம்சா ஆலவி

4 காந்தியம்

—டாக்டர் B.R. அம்பேத்கர்

## வரவிருப்பவை

இந்தியாவில் வர்க்கம், ஜாதி, நிலம் பற்றி - ஓர் அறிமுகக் கட்டுரை

—கேய்ல் ஓம்வெட்

மனித சமூகம் (MANAW SAMAJ)

—இராகுல சாங்கிருத்தியாயன்

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி

—ரஞ்சித் சாவ்

வாழும் நரகம் (LIVING HELL)

— ஒரு சீனத்து நாவல்

அரசியல் அதிகாரமும் சமூக வர்க்கங்களும்

—INCOS POULANTZAS



கார்முகில்